THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

LIBRARY
11 JAN 1963
STATE LEGISLATURE, MADRAS

Friday, 2nd November 1962.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

கல்லூரிகளில் தமிழ் போதனை மொழி

*குறிப்பிடப்பட்ட கேள்வி 7.—திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1962-63-ல் கலைக் கல்லூரிகளில் பயிற்சிமொழியைத் தமிழாக்கம் மாற்றம் குறித்து எடுத்த நடவடிக்கைகள் யாவை?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The special concessions given to the colleges that opted for Tamil medium during 1961–62 have been extended during the year 1962–63 also. For the publication of text-books in Tamil for use in the colleges adopting Tamil medium, the Government have set up a Bureau of Tamil Publications inaugurated in March 1962 with a capital of Rs. 10 lakhs. The functions of the College Tamil Committee have also been entrused to this Bureau. So far nine books have been published and 12 have been completed and are ready for printing. Twenty-one other books are under preparation. A cell of authors was also conducted in April 1962 in the Government Arts College, Coimbatore, to expedite the completion of the writing up of books.

The Principals and the Correspondents of all the aided colleges in Madras State were also addressed by Government informing them of the special concessions given by Government and requesting them to consider the question of adopting Tamil medium for the B.A. degree course in their institutions from 1962–63. Applications for affiliation to University for Tamil medium sections in Humanities in the following Government Colleges: (1) Government Arts College, Madras, (2) Queen Mary's College, Madras, and (3) Government College, Kumbakonam, for the year 1963–64 have also been made to the University of Madras.

திரு. மீ. கலியாணசுந்தரம்: 1959-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 14-ம் தேதி பிறப்பிக்கப்பட்டுள்ள அரசாங்க உத்தரவு கல்வி இலாகா 748-ன்படி 1963-64 அதாவது அடுத்த ஆண்டிலே எல்லாக் கல்லூரிகளிலும் பி.ஏ. வகுப்பு வரைக்கும் தமிழிலே பாடப் பயிற்சி ஆரம்பிக்கவேண்டுமென்றும், 1965-66-ல் அது பூர்த்தி ஆக

வேண்டுமென்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதே, அதற்காக சென்ற ஆண்டிலே என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது? இந்த ஆண்டிலே என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இப்பொழுது நான் கொடுத்த தகவல்களைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. எல்லாக் கல்லூரிகளிலும் தமிழ் போதனமொழியாக எடுத்துக்கொள்வதற்கு நாம் இணங்கி பல்கலைக்கழகத்திற்கு மனு போடுங்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கான பாடப் புத்தகங்கள் தயாரிக்கப் படவேண்டுமென்று சொல்லி, அவை தயாரிக்கப்பட்டு வருகின்றன. அதோடு இந்த ஆண்டிலே சர்க்கார் குறிப்பிட்ட மூன்று கல்லூரிகளைத் தேர்ந்தெடுத்து அதிலே தமிழ் போதனமொழியாக ஒரு செக்ஷனிலாவது இருக்கவேண்டுமென்று, அதற்கு பல்கலைக் கழகத்தின் அங்கிகாரம் வேண்டுமென்று இப்போது மனு போடப் பட்டிருக்கிறது. சென்ற ஆண்டிலே இம்மாதிரி மனு ஒன்றும் போடவில்லை. 1965-66-க்குள் கல்லூரிகளிலே தமிழ் போதனமொழியாக இருக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருந்தும், அதை நிறைவேற்றுவது அசாத்தியமானது என்று அரசாங்கத்திற்குப் புலப்பட்டது. அதற்கு பல்வேறு காரணங்கள் உண்டு. நாட்டின் ஒருமைப்பாடு இப்போது வற்புறுத்தப்பட்டு வரும் வகையிலே மத்திய சர்வீஸின் பரீட்சைகள் ஆங்கிலம் அல்லது ஹிந்தியில்தான் இருக்கவேண்டும், வேறு மொழியிலே இருக்க முடியாது என்று சமீபத்தில் நடந்த கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் தெரிவித்திருக்கிறார்கள். ஆங்கிலத்தை அடியோடு எடுத்துவிட முடியாது. தமிழ் மொழியில் பரீட்சை வைக்க ஒப்புக்கொள்வது நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு நல்லதல்ல.

திரு. சா. கணேசன்: 'பீரோ ஆப் டமில் பப்ளிகேஷன்' என்று ஒரு துறை வைத்து அதன் மூலமாக கல்லூரி நிலையிலே கற்பிக்கத் தமிழ் பாடப் புத்தகங்களை அச்சடிப்பது சம்பந்தமாக மேற்கொண்டுள்ள முயற்சி பரிபூர்ணமாக அல்லது போதிய அளவு பயனும், திறமையும் உள்ளதாக இருக்கிறதா? அப்படி இல்லை என்பது பலருடைய அபிப்பிராயமாக இருக்கிறது. ஆகையால் அரசாங்கமே நேரடியாக எடுத்து நிர்வகிக்கக்கூடிய ஏற்பாடுகளைச் செய்ய எண்ணம் உண்டா? அல்லது செய்ய முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்த முயற்சியிலே அரசாங்கத்திற்கு சம்பந்தம் இல்லை என்று சொல்வது நல்லதல்ல. அரசாங்கம் நேரடியாக அக்கரை எடுத்துக் கொள்ளுகிறது. அப்போதைக்கப்போது அரசாங்க அதிகாரிகளின் ஆலோசனை அளிக்கப்பட்டு வருகிறது. இதை அரசாங்கம் வேறு மாதிரியாக அமைத்தால் திருப்திகரமாக இருக்குமென்று சொல்லமுடியாது. இந்த முயற்சி திருப்திகரமாக நடைபெறுகிறது என்றுதான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

2nd November 1962]

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் அமைச்சர் அவர்கள் அரசாங்கத்தின் கொள்கையை தெளிவுபடுத்தியதுபற்றி மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அதாவது 1965-66-ல் தமிழை போதனா மொழியாக பூர்த்தி செய்வதற்குச் சாத்தியம் இல்லை, அப்படிச் செய்தாலும் நன்மையில்லை என்று அவர் இப்போது தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். முதலில் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட காலத்தில் இருந்ததைவிட, இப்போது என்ன மாறுதல் ஏற்பட்டு இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள் என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: உத்தரவு பிறப்பிக்கப்பட்ட போது இந்த நாட்டின் ஒருமைப்பாடுபற்றி இவ்வளவு தூரம் வற்புறுத்தப்படவில்லை. இந்த ஒருமைப்பாடு உணர்ச்சி நம் மாணவர்களிடையே உண்டாகவேண்டும் என்பதின் காரணமாகத் தான் இந்த முடிவிற்கு வந்துள்ளோம். அதோடு என்ஜினீயரிங், பப்ளிக் ஹெல்த், பாரஸ்ட் இந்த மூன்று சர்வீஸ்களுக்கும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். மாதிரி அகில இந்திய சர்வீஸாக இப்போது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இப்போது மத்திய சர்விஸ் பரீட்சைகளை ஆங்கிலம் அல்லது ஹிந்தியிலேதான் எழுதவேண்டும் வேறு மொழியில் எழுத முடியாது என்று சென்ற மாநாட்டிலே முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் தமிழ் கல்லூரிகளில் போதனா மொழியாக இருந்தால், மாணவர்கள் இந்தப் பரீட்சைகளில் தமிழில் எழுத முடியாது. மேலும் இப்போது சில அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. மாணவர்களும், பொது மக்களும் எவ்வாறு ஏற்றுக்கொள்ளுகிறார்கள் என்பது தெரிகிறது. ஆகையால் நாம் இதில் ஒரு முடிவு எடுத்துவிட்டோம் என்பதற்காக இதைப் பிடிவாதமாக வைத்துக்கொள்ளவேண்டும் என்பது அவசியம் இல்லை. இன்றைய நிலைமைக்கு உகந்த வகையிலே கல்வித் துறையில் மாற்றம் வேண்டுமென்று பல திருத்தங்கள் செய்வது அவசியம் என்பது கனம் அங்கத்தினருக்குத் தெரியும்.

திரு. ஜே. மாதா கவுடர்: கல்லூரிகளிலே படிக்கக்கூடிய மாணவர்கள் ஒரு சத விகிதம்கூட தமிழ் மீடியத்தில் படிக்க முன்வரவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? தமிழிலே படித்துவிட்டாலும் வெளிநாட்டிலே அவர்களுக்கு உத்தியோகம் கிடைக்காது என்று தமிழ் போதனாமொழியாக உள்ள கல்லூரியிலே அவர்கள் சேரவில்லை. ஆகவே தமிழை போதனா மொழியாகச் செய்வதற்கு அரசாங்கம் வற்புறுத்தாமல் இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் கலியாண சுந்தரம் அவர்கள்கூட முன்பு அரசாங்கம் ஒரு முடிவு எடுத்து இப்போது அந்த முடிவை மாற்றிக்கொண்டது ஏன் என்று கேட்டார்கள். இப்பொழுது கோவையிலே நடைபெறுகிற பரிட்சார்த்த திட்டத்தில் மாணவர்கள் போதிய அக்கறை கொள்ள வில்லை. அதோடு அல்லாமல் நாம் ஒரு கோணத்திலிருந்து பார்த்து முடிவு செய்தோம். இப்போது தமிழ் இளைஞர்கள் டில்லியிலும், கல்கத்தாவிலும், பம்பாயிலும் உத்தியோகம்

பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். டில்லியில் மாத்திரம் 20,000 பேர்கள் உத்தியோகம் பார்த்து வருகிறார்கள். இப்போது, இந்தச் சட்டசபை ஆரம்பிப்பதற்கு அரை மணி நேரத்திற்கு முன்புதான் ராஜஸ்தானில் வேலை பார்க்கும் ஒரு தமிழர், ஐ.ஏ.எஸ். ஆபீசர் என்னிடம் பேசிவிட்டுச் சென்றார். இதே மாதிரி 10 நாட்களுக்கு முன்பு ஒரிஸாவில் ஹோம் செக்ரட்டரியாக இருக்கும் ஒரு தமிழர் வந்து பேசிவிட்டுச் சென்றார். இதையெல்லாம் பார்க்கும்போது தமிழ் கல்லூரிகளிலே போதனைமொழியாக இருந்தால், பிற்காலத்தில் அவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று மாணவர்களே உணர்கிறார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஆங்கிலமே பயிற்சிமொழியாக கல்லூரி மட்டத்தில் இருக்கவேண்டியது அவ்வளவு அவசியம் என்று கருதினால், பின்னர் தமிழ் பயிற்சிமொழியாக இருக்கலாம், அது அவரவர் விருப்பத்திற்கு விடப்பட்டிருக்கிறது என்று உத்தரவு போட்டு அரசாங்கம் பணம் செலவுசெய்து தமிழ் புத்தகங்களை வெளியிடுவதின் அவசியம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அங்கத்தினர் அவர்கள் அரசாங்கத்தின் கொள்கையை உணர்ந்து கொள்ளவில்லை. ஆங்கிலமே இருக்கவேண்டுமென்று அரசாங்கம் விரும்பவில்லை, அவ்வாறு கருதவில்லை, அவ்வாறு நினைக்கவில்லை. ஆங்கிலத்தை என் மாணவர்களில் பெரும்பாலோர் விரும்புகிறார்கள் என்பதை உணர்ந்து அதற்கேற்றவாறு அவ்வகையில் திருத்தங்கள் செய்கிறோம். ஆனால், தமிழிலும் எல்லாப் பாடங்களையும் கற்கக்கூடும் என்பதுதான் அரசாங்கத்தின் நம்பிக்கை. அது என் திடமான நம்பிக்கையும் கூட. எல்லோரும் உத்தியோகத்தையே பார்த்துக் கொண்டிருப்பவர்கள் அல்ல. அநேகருக்கு ஐ.ஏ.எஸ். போன்ற பரிட்சைகள் எழுத ஆசையிருக்கும். அதற்கு நாம் குறுக்கே நிற்கக்கூடாது, தமிழை போதனைமொழியாக வைத்துப்படித்து அதனால் ஆகக் கூடாதது ஒன்றுமில்லை என்பது என் திடமான அபிப்பிராயம். இதற்கு செலவு செய்யப்படும் பணம் தண்டம் என்று சொல்வது சற்றும் முறையல்ல. நான் அப்படி சொல்லிவிட்டேன் என்று பயித்தியக்காரத்தனமாக கிளர்ச்சி நடக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் இதற்கு செலவு செய்வது தண்டம் என்று இந்த மன்றத்திலேயே சொல்கிறார்கள். அது ரொம்பவும் தவறு. அரசாங்கம் அப்படி கருதவில்லை. பத்து லட்சம் அல்ல இன்னும் ஒரு பத்து லட்சம் செலவானாலும்கூட தமிழில் பாட புத்தகங்களை வெளியிட்டு தமிழில் படிக்கிறவர்களுக்கு வசதி அளித்து தமிழ் மொழி மூலம் விஞ்ஞானத்தில்கூட பாடம் கற்கப் போதுமான வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் அவா.

திரு. சா. கணேசன்: தமிழிலே பாடம் கற்க மாணாக்கர்கள் மிக்க அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை என்று ஒரு சார்பினர் கருத்துச் சொல்கிறார்கள். மற்றொரு சார்பினர் தமிழுக்கு வாய்ப்பு விளம்

2nd November 1962]

இல்லை, ஏதோ அனாவசியமான செலவு ஆகிறது, தண்டமாகப் போகிறது என்று இன்வர்ட்டட் காமாவில் சொல்கிறார்கள். இதையெல்லாம் கவனிக்கிறபோது கலைச் சொற்களை சர்வ தேசிய சொற்களாகவே வைத்துக்கொண்டு கற்பிக்கிற மொழி மட்டும் தமிழாகவே இருந்து பாடங்கள் யாவும் கற்பிக்கப்படுமானால் அதனால் உடனடியான நல்ல பலனும், தீமையற்ற நல்ல வளமும் ஏற்படும் என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறதா? அப்படி ஏற்றுக்கொண்டால் அதற்குத் தக்கபடி பாடத்திட்டங்களை அமைக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதுதான் அரசாங்கத்தின் அபிப்பிராயம். "Commission for determining the scientific terminology" என்று ஒரு கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கமிஷனுக்கு தலைவர் யூனிவர்ஸிட்டி கிரான்ட்ஸ் கமிஷன் தலைவர் திரு. கோத்தாரி அவர்கள். அந்தக் கமிஷனுக்கு ஒரு சென்ட்ரல் அட்வைஸரி போர்ட் இருக்கிறது. அதில் நான் கூட அங்கத்தினராக இருக்கிறேன். சில நாட்களுக்கு முன்பு அந்தக் கூட்டம் நடந்தபோது 'கிளாஸரீஸ்' எவ்வாறு தயாரிக்கப் பட்டிருக்கிறது என்று அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். அதில் 60 சத விகிதம் கலைச் சொற்கள் அகில உலகச் சொற்களாக இருக்கின்றன, 20 சதவிகிதம் அகில இந்தியச் சொற்களாக இருக்கின்றன, இன்னொரு 20 சத விகிதம் அந்தந்த பிராந்தியச் சொற்கள். அதோடு நம் பிராந்தியத்திலிருந்து அறிஞர்களை அழைத்து வைத்து அவர்கள் ஆலோசனைகளைக் கேட்டு தயாரித்திருக்கிறார்கள். நானும், மற்ற சக அமைச்சர்களும் சொன்னோம், அந்தந்த பிராந்தியத்தில் ஒரு கருத்தரங்கு வைத்து இன்னும் மற்ற அறிஞர்களையும் கலந்து இந்த கலைச்சொற்களை உருவாக்குகிறபோது, பிராந்திய கலைச்சொற்கள் சரியாகயிருக்கிறதா என்று பார்த்துச் செய்யவேண்டுமென்று சொன்னோம். இப்பொழுது இவர்கள் பூர்வாங்கமாக தயாரித்த கிளாஸரியை மீண்டும் திருத்தி வெளியிடுவதற்குக்கூட அவர்கள் சம்மதித்திருக்கிறார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: நான் வீண் செலவு செய்வானேன் என்று கேட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்கள் தமிழில் சாத்தியம் என்று ஒப்புக் கொண்டதற்கு, தமிழில் அவருக்கு இருக்கக்கூடிய நம்பிக்கையை வெளிப்படுத்திக் கொள்வதற்கு பயன்பட்டதற்காக சந்தோஷப்படுகிறேன். அது நிற்க, தமிழை பயிற்சிமொழியாக்குவது தேசிய ஒருமைப்பாட்டிற்கு அவ்வளவு சாத்தியமாக இராது என்று அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்கு பதிலளித்தார்கள். அல்லது நான் சரியாக புரிந்து கொண்டேன் என்றால், ஆங்கிலமே தொடர்ச்சியாக, பயிற்சிமொழியாக நீடிக்க வேண்டியது தேசிய ஒருமைப்பாட்டிற்கு அவசியம் என்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்கள், அப்படி அவர்கள் எழுதிய கட்டுரைகளையும் படித்திருக்கிறேன். தமிழில் பயிற்சி பெறுவதற்கு மாணவர்கள் வாராததற்குக் காரணம் மத்திய அரசில் இந்தியை மட்டும் ஆட்சிமொழியாக ஏற்படுத்தினாலோ என்ற

பயம் இருப்பதினால்தான் என்பதை அமைச்சர் அவர்கள் உணரு வார்களா ? அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் 14 மொழிகளையும் ஆட்சிமொழிகளாக ஏன் டெல்லி சர்க்கார் அங்கிகரிக்கவில்லை என்பதை எடுத்துக் கூறியிருக்கிறார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்திய மொழிகள் 14-ம் தேசிய மொழிகளாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன, நம் அரசியல் சட்டத்திலே. நம் மாநில ஆட்சியைப் பொறுத்த மட்டில் தமிழ் மொழியில்தான் நடைபெறும், நடைபெற்றுக் கொண்டு வருகிறது. மேலும் அதை விஸ்தரித்து பரிபூர்ணமாக தமிழில் ஆட்சிமுறை நடத்த வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் மத்திய ஆட்சியைப் பொறுத்த மட்டில் ஒரு பொது மொழியிருக்க வேண்டும். அது இந்தியாகும். 1965-ல் இருந்து இந்தியில் ஆட்சி நடத்துவது என்று இருந்தது. இந்தி கற்கவேண்டியது அவசியம் என்று நாமும் வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். தமிழ் நாட்டு மாணவர்கள் அதைக் கற்றுக் கொண்டு வருகிறார்களென்றாலும் அதைக் கையாள்வதில் கஷ்ட மிருக்கிறது. அதனால் பாதகம் ஏற்பட்டுவிடும் என்று உணர்ந்து அதைத்தான் மத்திய அரசுக்கு எடுத்துக் காட்டினோம். சமீபத்தில் நடந்த கல்வியமைச்சர்கள் மகாநாட்டில், இந்தியைத் தாய்மொழியாக கொண்ட மாநிலங்கள் இந்தி மூலம் கல்லூரிப் படிப்பு சொல்லிக் கொடுப்பதில் கஷ்டமில்லை, அவர்கள் அதனால் பாதிக்கப்படமாட்டார்கள்; ஆனால் மற்ற இடங்களில் ஆங்கிலத் தையும் வைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னேன். பதினான்கு மொழிகளையும் மத்திய ஆட்சி மொழிகளாக வைத்துக் கொள்ள ஒப்புக்கொள்ளவில்லை. அப்படி ஒப்புக்கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பதிலும் நியாயமில்லை. மூன்றல்லது நாலு மொழிகளை வைத்துக் கொள்ளலாம். ஆனால் 14 மொழிகளையும் மத்திய ஆட்சி மொழிகளாக வைத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்வது நியாயமல்ல, அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆங்கிலத்தை வைத்துக் கொள்வதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்தியை நாம் கையாள முடியாது, ஆனால் மற்ற ராஜ்யங்க ளோடும், மத்திய அரசோடும் தொடர்பு வைத்துக் கொள்ள ஆங்கிலம் இல்லாமல் முடியாது. அதைத்தான் மாணவர்களும், பெற்றோர்களும் உணர்ந்திருக்கிறார்கள். ஆகவே, ஆங்கிலத்தை நாம் ஓரளவு கைவிடுவதற்கு இல்லை. தமிழில் பாடப்புத்தகங்களை படித்துவிட்டு மத்திய பரிட்சைகள், எக்கனமிக்ஸ், ஹிஸ்டரி போன்றவைகளில் பரிட்சை எழுதுவதாக இருந்தால் தமிழில் படித்துவிட்டு ஆங்கிலத்தில் எழுதுவதனால் பாதகம் ஏற்படும். மத்திய பரீட்சைகளில் தமிழ் நாட்டு மாணவர்கள் முன்னணியில் நிற்கிறார்கள், ஆகவே இதனால் பாதகம் ஏற்பட்டுவிடுமோவென்று மாணவர்கள் அச்சப்படுகிறார்கள். அதற்காக நாம் மாணவர்களை குறை கூறுவதற்கில்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : தமிழ்நாட்டிலே பிற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். மலையாளம் படிக்க வேண்டும் அல்லது கன்னடம் படிக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பிச்சொன்னால் நாம்

2nd November 1962]

பள்ளிக்கூடம் அமைத்துக் கொடுக்கிறோம், அதாவது அதற்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கிறோம். அதேபோல் கல்லூரிகளில் தமிழை போதனமொழியாகக் கொண்டு படிக்க விரும்புகிற மாணவர்களுக்கு தமிழை போதனமொழியாக சில கல்லூரிகளில் வைத்திருக்கிறோம் என்பது அரசாங்கத்திற்கு தெரியுமா? இதனால் தண்டச் செலவு ஏதும் இல்லை என்று அரசாங்கம் கருதுவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: தண்டச் செலவைப்பற்றி ஒன்றும் பிரச்னை இல்லை. ஆங்கிலத்தை கைவிடுவதற்கு இல்லை. ஆங்கிலம் வேண்டுமென்று சொல்கிற மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுக்கவேண்டும். தமிழை விரும்பி படிக்கிறவர்களுக்கு அதற்கும் வசதிசெய்து கொடுக்க வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை.

திரு. டி. கார்ச்சா கவுடர்: தமிழுக்காக பாடுபடுகிறோம் என்று சொல்லும் சில அரசியல் வாதிகள், மாணவர்களின் நன்மையைவிட தங்கள் கட்சிகள் வளருவதற்கு வெளியில் பிரசாரம் செய்வது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதுபற்றியெல்லாம் எனக்குத் தெரியாது. மொழிப்பற்று எவ்வளவு இருப்பதாக தெரிகிறதோ அந்த அளவு நாட்டுப்பற்று இருந்தால் போதும். அதைத்தான் நான் சொல்லவிரும்புகிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: நாட்டுப்பற்று வளர்வதற்குக்கூட மொழிப்பற்றும் அவசியம். இவையிரண்டும் ஒன்றுக்கொன்று முரணானதல்ல. உத்தரவு பிறப்பிக்கிறபோது இன்று ஆங்கிலம் நீடிக்க வேண்டுமென்று சொல்கிற கட்சிகள் உள்பட எல்லோரும் சேர்ந்துதான் இந்த உத்தரவு பிறப்பிப்பதற்கு காரணமாக இருந்தது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? மத்திய ஆட்சிமொழி ஒன்று ஆங்கிலம் அல்லது இந்தி என்று திட்டவட்டமாக இருக்கவேண்டும். ஆங்கிலமே நீடிக்கும், இந்தி ஆட்சிமொழியாகாது என்று கூறிவிடுவார்களானால் அமைச்சர் அவர்கள் கொண்டிருக்கக்கூடிய கருத்தை நானும் ஏற்றுக்கொள்வேன். ஆங்கிலத்தை தொடர்ந்து நடத்துவதென்று உதட்டளவில் ஒப்புக் கொண்டு இந்தி எல்லாப் பகுதிகளிலும் புகுத்தப்படும்போது அதனால் தமிழ்நாட்டிற்கு பெரும் பாதகம் ஏற்படாதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இது வேறு விஷயம். இது, பார்லிமெண்டில் கேட்கவேண்டிய விஷயம். ஆனால் சமீபத்தில்கூட நான் உள்நாட்டு அமைச்சர் அவர்களோடு பேசிக்கொண்டிருந்தேன். அவர்கள் உதட்டளவில் சொல்வதென்று ஒன்றுமில்லை. மனப்பூர்வமாக சொல்கிறார்கள். இந்தியும், ஆங்கிலமும் இருக்கும் என்று கூறினார்கள். காலவரம்பில்லாமல் ஆங்கிலமும் நீடித்திருக்க வேண்டுமென்று சொன்னோம். அதை ஏற்றுக் கொண்டார்கள். அந்த வகையில் மசோதா கொண்டுவந்திருக்கிறார்கள்.

ஆட்டுப் பண்ணைகள்

* *1071 கேள்வி.*—திரு. கரு. சீமைச்சாமி: கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை மாவட்ட, கொடைக்கானலில் மேல்நாட்டு உயர் ரக ஆடுகளை வைத்து பராமரிக்கும் ஆட்டுப் பண்ணை ஒன்று ஆரம்பிக்க உத்தேசமுண்டா?

(இ) ஆம் என்றால் எப்போது ஆரம்பிக்கப்படும்?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) வெளிநாட்டு ரக ஆடுகளை வளர்க்க கொடைக்கானலில் ஓர் ஆட்டுப்பண்ணையை ஏற்படுத்தும் உத்தேசம் உண்டு.

(இ) மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் அதை ஆரம்பிக்கலாமென எதிர்பார்க்கிறோம்.

* 1072 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there is any proposal to start a Sheep Breeding Centre in Harur taluk in Salem district?

THE HON. SRI P. KAKKAN: No, Sir.

* 1073 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether any buildings for the sheep and wool development centres have been constructed in Omalur and other places in Salem district;

(*b*) if so, in which places; and

(*c*) the number of centres working and the results achieved so far?

THE HON. SRI P. KAKKAN: (*a*) & (*b*) Buildings for eight Sheep and Wool Extension Centres were constructed in Omalur taluk and for one Sheep and Wool Extension Centre in Attur taluk of Salem district in the following places:—

OMALUR TALUK.

(1) Danishpet.
(2) Nangavalli.
(3) Chikkampatti.
(4) Mecheri.
(5) Omalur.
(6) Periasoragai.
(7) Chinnagonur.
(8) Ayyampudur.

2nd November 1962]

ATHUR TALUK.

(9) Veeraganur.

(c) In addition to the nine centres mentioned above, three centres were also sanctioned to be established in Hosur taluk during 1961–62 and the centres have been started at the following places :

(1) Kundamaranpalli.
(2) Thalli.
(3) Avalapalli.

Building works for these centres will be taken up and completed when the lands become available. The working of the schemes has resulted in increasing the quality of sheep in the area and educating the people of the area in proper Sheep Husbandry practices.

Dairy farm

* 1074 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there is any proposal for setting up an experimental farm and dairy in the State, with the Co-operation of the Government of Denmark?

THE HON. SRI P. KAKKAN : There is no proposal for setting up an experimental farm and dairy in this State with the co-operation of the Government of Denmark.

திரு. வை. சங்கரன் : இதுபோன்று ஒரு திட்டம் மைசூர் அரசாங்கத்தாலே வகுக்கப்பட்டிருக்கிறது. அதைப் பின்பற்றி நம்முடைய ராஜ்யத்திலும் அத்தகைய ஏற்பாடு செய்து, பயன் பெற அரசாங்கம் உத்தேசிக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்த மாதிரி ஏற்பாடு இப்போது இல்லை.

* 1075 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there is any proposal to open a cattle farm at Kesavapuri near Valliyoor, Nanguneri taluk, Tirunelveli district?

THE HON. SRI P. KAKKAN : There is a proposal to establish a farm in Tirunelveli district during the Third Five-Year Plan period. The exact place of location has not yet been decided.

திரு. வை. சங்கரன் : அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் அந்த இடத்திலே அதற்கான பூர்ண வாய்ப்புக்களும், வசதிகளும் இருக்கிறது என்று முறையிட்டார்களே, அதை சர்க்கார் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இடம் பார்த்திருக்கிறார்கள். இன்னும் ஒன்றும் செய்யவில்லை. திருநெல்வேலி டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சிலிலே ஒரே ஒரு தீர்மானம் மட்டும் செய்திருக்கிறார்கள். அதிலே கேசவன்நல்லூர் பக்கத்திலே 700 ஏக்கர் இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். அதைப்பற்றி பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் எவ்வித முடிவும் எடுக்கவில்லை.

[2nd November 1962

திரு. ந. சௌந்திரபாண்டியன் : அரசாங்கத்திலிருந்து கேசவ நேரியில் வைக்க முடியாது என்று பதில் அனுப்பப்பட்டு இருக்கிறதா? அதாவது அங்கே தண்ணீர் இல்லை, அதன் காரணமாக அங்கே வைக்க முடியாது என்று பதில் கொடுத்திருக்கிறார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே ஒரு இடத்தைப் பார்த்து பரிசிலனை செய்திருக்கிறார்கள். அபிஷேகப்பட்டியில் நெல்லையப்பர் கோவிலுக்குச் சொந்தமாக ஏற்கனவே ஒரு டயரி பாரம் கூட்டுறவு சொஸைட்டி அடிப்படையில் நடந்து கொண்டிருக்கிறது. இப்போது அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இதைப் பரிசீலிக்காமல் அரசாங்கம் எவ்வித பதிலையும் சொல்ல முடியாது.

திரு. ந. சௌந்திரபாண்டியன் : அரசாங்கத்திலிருந்து அங்கு போதுமான தண்ணீர் வசதி இல்லையென்று பதில் வந்திருக்கிறது. ஆனால், புதைப்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சி செய்ததிலே அங்கே அதிகமாகவே தண்ணீர் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இது அரசாங்கத்திற்குத் தெரியுமா? இதை அரசாங்கம் தீவிரமாக பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அங்கே தண்ணீர் இருக்கிறதா, இல்லையா என்ற தகவல் என்னிடத்திலே இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால், அதற்கு பதில் சொல்ல முடியும்.

District boards (residuary staff)

* 1076 *Q.*—SRI C. CHIRANJEEVULU NAIDU : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) what is the work of residuary staff of the defunct District Boards; and

(*b*) what is the position of staff working under the Regional Inspector of Local Boards?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The residuary staff sanctioned to the districts is for attending to the work left resultant on the abolition of the district boards, such as, transfer of assets and liabilities of the district boards to the Panchayat Unions, closure of the Provident Fund accounts of the former district board employees and their transfer to the Panchayat Unions, settlement of audit objections, etc.

(*b*) The staff working under the former Regional Inspectors of Municipal Councils and Local Boards have now been ordered to be absorbed in the newly formed Panchayat Development Branches in the District Collectorates and Panchayat Development Sections in divisional offices and constituted into a separate unit to be administered by the Collector of the district pending the constitution of a service in which these posts will be encadred.

2nd November 1962]

விவசாயப் பண்ணைகள்

*1077 கேள்வி.—திரு. ஆ. துரை அரசன்: கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப் பாரா—

(அ) தமிழ்நாட்டிலே தற்பொழுது இயங்கும் கூட்டுறவு விவசாயப் பண்ணைகள் எத்தனை?

(இ) அரந்தாங்கி தாலுகாவில், ஆவயம்--பெருங்குடியில் உள்ள கூட்டுறவு விவசாயப் பண்ணை மேற்பார்வையில் உள்ள நிலம் எத்தனை எக்கர்? வருமானம் எவ்வளவு?

(உ) விவசாயத்திற்காக வாங்கப்பட்ட மாடுகள் எத்தனை?

(எ) விவசாயக் கருவிகள் எவ்வளவு வாங்கப்பட்டுள்ளன?

கனம் திரு. ந. நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) இருநூற்றி இருபத்தாறு.

(இ) இந்த விவசாயப்பண்ணை 127·36 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்துள்ளது. 1961--62-ஆம் ஆண்டில் 25 ஏக்கர் நிலத்தில்தான் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ரூ. 1,515 மதிப்புள்ள மகசூல் கிடைத்துள்ளது.

(உ) பதினொன்று ஜோடி உழவு மாடுகள் வாங்கப்பட்டுள்ளன.

(எ) ஒரு ஆயில் எஞ்ஜினின் விலை உள்பட ரூ. 3,451-க்கு விவசாயக் கருவிகள் வாங்கப்பட்டுள்ளன.

திரு. கரு. சீமைச்சாமி: ஸார், கூட்டுறவு விவசாயப்பண்ணை முறை தமிழ் நாட்டில் பல இடங்களிலே தோல்வி அடைந்திருப் பதாலும், வெற்றிகரமாக நடந்து வருகிற பண்ணைகளுக்கு செலவு அதிகமாக ஆவதாலும், இதைக் கைவிட அரசாங்கம் முயற் சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

கனம். திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: கூட்டுறவு பண்ணைகளிலே பலவிதமான பண்ணைகள் இருக்கின்றன. எந்தப் பண்ணையைப் பற்றி அங்கத்தினர் அவர்கள் சொல்லு கிறார்கள் என்பது எனக்குத் தெரியவேண்டும்.

திரு. ஆ. துரை அரசன்: கனம் சபாநாயகர் அவர்களே, அரந் தாங்கி தாலுகாவிலேயுள்ள ஆவயம் பெருங்குடி கூட்டுறவு விவசாயப் பண்ணை தற்போது நடைபெற்றுக் கொண்டிருக் கிறதா என்று அறிய விரும்புகிறேன்?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: அதற்குத்தான் நான் இப்போது பதில் சொன்னேன். அதிலே, அரந்தாங்கி தாலுகாவில் ஆவயம் பெருங்குடி விவசாயப் பண்ணைக்காக 127·86 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்திருப் பதாகவும், அதிலே 25 ஏக்கர் நிலத்தில் இப்போது சாகுபடி நடந்துக்கொண்டிருக்கிறது என்றும் சொன்னேன்.

திருமதி சி. கொளந்தையம்மாள்: தலைவர் அவர்களே, கூட்டுறவு விவசாயப் பண்ணைகளிலே நேரிடையாக விவசாயம் நடந்து

வரும் விவசாயப் பண்ணைகள் எத்தனை, தனியார் வைத்து அவர்கள் மேற்பார்வையில் நடந்துவரும் விவசாயப் பண்ணைகள் எத்தனை என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : தனியாகக் கேள்வி தேவை.

திரு. ஆ. கு. சுப்பையா : ஸார், கூட்டுறவு சாகுபடி செய்வதற்காக விவசாயிகள் அதிக அக்கறை காட்டுவதால், தர்ம ஸ்தாபனங்களுடைய நிலங்களையெல்லாம் உடனடியாக எடுத்துக்கொண்டு, கூட்டுறவு முறையில் அவர்கள் விவசாயம் செய்வதற்குக் கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இப்போது பரிசிலிக்கப்பட்டு வருகிறது.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, மாயூரம் பக்கத்தில் வக்காரமாரியில் அமைக்கப்பட்டு இருக்கும் கூட்டுறவுப் பண்ணையில் தகராறு ஏற்பட்டு இருந்ததே, இப்போது அது எந்த நிலவரத்தில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன் ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : தனியாகக் கேள்வி போட வேண்டும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவு விவசாயப் பண்ணைகள் வைத்து நடத்துவது ஏழை மக்களுக்கு மிகவும் லாபகரமாக இருக்கிறது. இதிலே அவர்களுக்கு மாடுகள் வாங்குவதற்காக கொடுக்கும் பணத்திலே எவ்வளவு தொகை இனமாகக் கொடுக்கப்படுகிறது ? எவ்வளவு கடனுக கொடுக்கப்படுகிறது ? அதேபோல், கிணற்றுக்கு மான்யம் கொடுப்பதிலேயும், எவ்வளவு தொகை இனம், எவ்வளவு தொகை கடனுக வழங்கப்படுகிறது என்பதை தெரிவிக்க முடியுமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : மாடுகள் வாங்குவதற்கு கொடுக்கப்படுகிற பணம் அநேகமாக இனமாகத் தான் கொடுக்கப்படுகிறது. மற்றபடி, அடுத்த கேள்விக்கு தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லப்படும்.

திரு. ஜே. மாதா கவுடர் : ஸார், தமிழ் நாட்டிலே கூட்டுறவு சங்கங்கள் நல்ல முறையிலே நடக்கிறது என்று பொதுமக்கள் சொன்னலும்கூட, கூட்டுறவு பேரிலே நம்பிக்கையில்லாத கட்சிக்காரர்கள் அதைப்பற்றி குறை கூறிக்கொண்டு வருவது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

(பதில் இல்லை.)

* 1078 *Q.*—SRI V. KRISHNAMOORTHY : Will the Hon. the Minister for Co-operation be pleased to state the number of co-operative agricultural farms in operation in the State?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Twenty-eight.

2nd November 1962]

*1079 கேள்வி.—திரு. இரா. நாராயணன் : கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பெரம்பலூர் வட்டம், ஓகளூர் அல்லது அத்தியூர் இவைகளில் ஏதாவது ஒன்றில் விவசாயப் பண்ணை ஒன்று நிறுவ உத்தேசமுண்டா ?

கனம் திரு பூ. கக்கன் : இல்லை.

திரு. இரா. நாராயணன்: தலைவர் அவர்களே, ஓகளூர், அத்தியூர் ஆகிய இடங்களில் விவசாயப் பண்ணை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. சுற்று வட்டாரத்தில் நீர் வளமும், நில வளமும் இருப்பதால், அங்கு பொது மக்கள் ஒரு விவசாயப் பண்ணை வேண்டும் என்று விரும்புவதால், அதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா ? 9-30 a. m.

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே இது பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது உடையார்பாளையம் தாலூகாவில் காமரசவல்லியில் ஒரு ஸீட் பாரம் வைப்பதாக ப்ரப்போஸல் இருக்கிறது. ஓகளூர் அல்லது அத்தியூரில் வைப்பதாக இல்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். இருந்தாலும், இதைப்பற்றி மறுபடியும் 'எக்ஸாமின்' பண்ணச் சொல்லுகிறேன். 'ஸீட் பாரம்' வைப்பதென்றால் நினைத்த இடத்தில் வைக்க முடியாது. அதற்கு பூமியின் தரம் நன்றாக இருக்கவேண்டும். நஷ்டம் வந்துவிடக்கூடாது. எல்லாவற்றையும் பார்த்துதான் பரிசீலனை செய்ய வேண்டும்.

மணிலா உற்பத்தி.

*1080 கேள்வி.—திரு. கு. கோபால கவுண்டர் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

செஞ்சி தாலூகாவில் மணிலா உற்பத்தி அதிகமாக இருப்பதால் அங்கு மணிலா கேக் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அமைக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இல்லை, ஐயா.

தொழிற்பயிற்சி (கடன் உதவி)

*1081 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் } கனம்
திரு. இரா. நாராயணன் }
கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தொழிற்கல்வி பயிலும் என்.ஜி.ஓ-க்கள், ஆசிரியர்கள் போன்றோர் பிள்ளைகளுக்கு வட்டியில்லாக் கடன் வழங்கும் திட்டத்தின் விவரமென்ன ?

[2nd November 1962

THE HON. SRI R. VENKATARAMAN : A statement [a] is placed on the table of the House.

திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய பதிலிலிருந்து ஏழை எளிய மாணவர்களுக்கு கல்வி வசதிக்குக் கடன் அளிப்பதற்கு உரிய பரிசிலனை நடந்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அந்தப் பரிசீலனையின் முடிவு சுமாராக எவ்வளவு காலத்திற்குள் எடுத்துக் கொள்ளப்படும்? இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இந்தத் திட்டம் சேர்க்கப்பட்டிருப்பதின் காரணமாக, அவசரமாக இதற்கு என்ன ஏற்பாடு செய்யப்படும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: பரிசீலனை முடிந்து உத்தரவும் பிறப்பித்தாகிவிட்டது. இந்தப் பதில் தயாரிக்கப்படும் காலத்தில், அது பரிசீலனையில் இருந்தது.

திரு எம். எஸ். செல்வராஜன்: சாதாரணமாக இது போன்ற சலுகைகளுக்கு உரிய பாரங்கள் காலாகாலத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கிடைக்கவில்லை என்பது பற்றி கனம் அமைச்சர் அவர்களுக்கு புகார் வந்திருக்கிறதா? எந்த இலாகா அதிகாரிகளுக்கு இதற்குரிய பாரத்தைப் பெறுவதற்கு விண்ணப்பித்துக் கொள்ளவேண்டும். அதற்குரிய நடைமுறை என்ன என்பதை கனம் அமைச்சர் அவர்கள் தெரியப்படுத்துவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சர்க்காரிடம் பாரங்கள் கிடைக்கவில்லை என்று புகார் வரவில்லை. அந்த பாரங்கள் எங்கு கிடைக்கவில்லை என்று எழுதினால், உடனடியாகக் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

தி. மு. க. மறியல்.

*1082 கேள்வி.—திரு ர. ஜீவரத்னம்: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 19-ம் தேதியில் வேலூரில் நடந்த தி.மு.க. கலவரத்தில் பங்குகொண்டதற்காக சர்க்கார் ஊழியர்கள் யாரேனும் கைது செய்யப்பட்டிருக்கிறார்களா?

(இ) அப்படியானால், அவர்கள் எந்த இலாகாவைச் சேர்ந்தவர்கள்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) வேலூரில் அரசாங்க ஊழியர் எவரும் கைது செய்யப்படவில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை?

*1083 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the number of M.L.As., M.L.Cs. and M.Ps respectively who were prosecuted and convicted in connection with the D.M.K. agitation in July 1962;

a Printed as Appendix I on pages 515–516.

2nd November 1962]

(b) whether any representation has been received from any Member of the Assembly for the suspension of the sentence to enable them to attend meetings of the Select Committees; and

(c) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Eighteen M.L.As. one M.L.C. and four M.Ps. were proescuted in connection with the Dravida Munnetra Kazhagam agitation on 19th July 1962, of whom, 16 M. L. As. one M. L. C. and 4 M. Ps. were convicted.

(b) Sri K. S. Mani, M.L.A., who is a member of the Joint Select Committee on the Madras Iruvaram Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962, requested that he might be released on parole to attend the meetings of the Committee in Madras on 16th, 17th and 18th August 1962.

(c) The Government declined to accede to his request.

திரு மீ. கலியாணசுந்தரம்: இன்னும் எவ்வளவு சட்டமன்ற உறுப்பினர்கள் சிறையில் இருந்து வருகிருர்கள்? நாட்டிலே அரசியலில் ஏற்பட்டிருக்கக்கூடிய மாறுதலை உத்தேசித்தும், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கொள்கையில் ஏற்பட்டிருக்கக்கூடிய மாறுதலை உத்தேசித்தும் அவர்களை விடுதலை செய்யும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

கனம் திரு எம். பக்தவத்சலம்: திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையில் மாறுதல் ஏற்பட்டிருந்தால், அதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்பேன். அதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறவேண்டும். கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு காலத்தில் அவர்கள் சார்பாக கூறி இருக்கக்கூடிய நிலையில் இருந்திருக்கலாம். இன்றைக்கு அவர் அந்த நிலையில் இல்லை. (சிரிப்பு) இன்னும் மற்றவர்கள் சிறையில் இருக்கிருர்களா, எத்தனை பேர்கள் இருக்கிருர்கள், எப்பொழுது விடுதலை செய்யப்படுவார்கள் என்பதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை. மற்றும் அவர்களை முன்னதாக விடுதலை செய்வது என்பது பற்றி தனிக் கேள்வி வேண்டும்.

திரு. மு. கருணுநிதி: பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டித் தலைவராக இருக்கிற எதிர்க்கட்சித் தலைவர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் அந்தக் கமிட்டியினுடைய முதல் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு வரவேண்டும் என்று எழுதியிருந்த மனு என்ன ஆயிற்று? அது நிராகரிக்கப்பட்டது என்ருல், என்ன காரணம்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எதிர்க்கட்சித் தலைவர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் அரசாங்கத்திற்கு அம்மாதிரி எழுதவில்லை. பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டிக் கூட்டத்திற்கு வர வேண்டுமென்று தங்களுக்கு அவர் எழுதியிருந்தார்கள். அதைத் தாங்கள் அரசாங்கத்திற்கு அனுப்பியிருந்தீர்கள். அதைப் பரிசிலனை செய்து பார்த்ததிலே, பெரோலில் விடுவதற்கு இது வரையில் இது ஒரு எற்றுக்கொள்ளப்பட்ட காரணம் அல்ல என்பதினுல், அந்த வேண்டுகோள் அங்கீகரிக்கப்படவில்லை.

[2nd November 1962

திரு. டி. கார்ச்சா கவுடர்: கைது செய்யப்பட்ட எம்.எல்.ஏ., எம்.எல்.ஸி-க்களில் எத்தனை பேர்கள் 'தாங்கள் மறியலில் கலந்து கொள்ளவில்லை, வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தோம்' என்று கூறியிருக்கிறார்கள்? அவர்களுடைய பெயர்களை அறிவிக்க முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அது பற்றி என்னிடம் தகவல் இல்லை.

MR. SPEAKER: The hon. Member Sri T. Karcha Gowder, must ask the Court about this.

* 1084 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Finance be pleased to state the total number of employees who abstained from work in all Government offices due to the picketing organized by D.M.K. on 19th July 1962?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The information is not available.

* 1085 கேள்வி.—திரு. டி. கார்ச்சா கவுடர்: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 19-ந் தேதியன்று நம் மாநிலத்தில் நடந்த திராவிட முன்னேற்றக் கழக மறியலில் கலந்து கொண்டதாக அரசாங்க ஊழியர்கள் எவரேனும் கைது செய்யப்பட்டார்களா?

(இ) அப்படியானால் எத்தனை பேர்?

(உ) இவர்களில் எத்தனை பேருக்கு வருத்தம் தெரிவித்துக் கொண்டதன்பேரில் மன்னிப்பு அளிக்கப்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) ஆம்; ஐயா.

(இ) மொத்தம் ஏழு ஊழியர்கள் கைது செய்யப்பட்டனர்—மூவர் மறியலுக்காக; நால்வர் 151-வது பிரிவின் கீழ், காவலில் வைக்கப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

(உ) முதல் மூவரில் ஒருவரும் மன்னிப்பின் பேரில் விடுதலை செய்யப்படவில்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர்: கைது செய்யப்பட்ட அரசாங்க ஊழியர்களின் பேரில் எந்த விதமான நடவடிக்கை எடுப்பதாக அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எந்த நடவடிக்கை என்று நான் விடையின் மூலம் கூறுவதற்கில்லை. தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. இராம. அரங்கண்ணல்: சென்னையிலே நடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் மறியலின்போது, போலீஸார் அத்து மீறிய வகையில் நடந்த நோத்தில் வேடிக்கை பார்க்கச் சென்ற பல பேர்கள் கைது செய்யப்பட்டது உண்மையா? அதிலே ஒருவர்

2nd November 1962]

காங்கிரஸ்காரர் என்பதும், அவர் பேரில் வழக்குத் தொடராப் பட்டு, அந்த வழக்கு தள்ளப்பட்டிருக்கிறது என்பதும் உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : போலீஸார் அத்து மீறி நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள் என்று கனம் அங்கத்தினர் வேண்டுமானால் நினைத்துக்கொள்ளலாம், பிரசாரம் செய்யலாம். அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. அது உண்மை அல்ல. அவர்கள் கேட்கும் மற்றத் தகவல் பற்றி என்னிடம் ஒன்றும் இல்லை.

* 1086 *Q.*—SRI J. MATHA GOWDER : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of Government Officials who have availed leave on 19th July 1962 (inclusive of N.G.Os., Police Officers and teachers);

(*b*) the number of N.G.Os. who were arrested for taking part in the picketing organized by the D.M.K. on that date; and

(*c*) the action taken against the officials who were so arrested?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The exact number of Government servants who availed themselves of casual leave on 19th July 1962 is not available.

However the cases of all those who were on casual leave have been scrutinised, and Government have satisfied themselves that their absence was for bona fide reasons.

(*b*) & (*c*) Three N.G.G.O's were arrested for picketing on that date, all of them in Madras City. One of these was a Binder in the Press, the second an attender and the third a member of a work-charged establishment. The first two were convicted and released under the Madras Probation of Offenders Act, and they have been placed under suspension pending disposal of the disciplinary proceedings which have been instituted against them. The third person was convicted and sentenced to two months R.I. He has since resigned and is no longer in service.

Madras Co-operative Societies Act

* 1087 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Co-operation be pleased to state when the Government propose to issue the notification under section 1, sub-section 3 of the Madras Co-operative Societies Act, 1961?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : The draft rules to be framed under the Madras Co-operative Societies Act, 1961 are under consideration. The Notification under sub-section 3 of section 1 will be issued as soon as the draft rules are finalised.

[2nd November 1962

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்தச் சட்டம் நிறைவேற்றிய பிற்பாடு ஒரு வருஷத்திற்கு மேல் ஆகியும், விதிகள் இயற்று வதற்கு இவ்வளவு காலதாமதம் ஆவதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : ரொம்ப நல்ல முறையிலே, நுணுக்கமான முறையிலே சட்டத்தை அணுக வேண்டிய சிரமங்கள் இருக்கின்றன. அதற்கு விதிகள் இயற்றுவது பற்றி நல்ல முறையில் பரிசிலனை நடந்துகொண்டிருக்கிறது. அநேகமாக அது முடிவுக்கு வரும் நிலையில் இருக்கிறது. ஆகவே கூடிய சீக்கிரம் விதிகள் அமுலுக்குக் கொண்டுவரப்படும்.

கூட்டுறவு விவசாய பாங்குகள்

*1088 கேள்வி.—**திரு. டி. கார்ச்சா கவுடர் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

கூட்டுறவு விவசாய பாங்குகளை ஆரம்பிக்க உத்தேச முண்டா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இல்லை, ஐயா.

திரு. டி. கார்ச்சா கவுடர் : தமிழ் நாட்டில் இன்று இருக்கும் கிராம கூட்டுறவு சங்கங்களைவிட விவசாய பாங்குகள் செவ்வனே நடைபெற்று வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படி யிருந்தால், மத்திய அரசாங்கத்தினிடம் மீண்டும் வற்புறுத்தி, தமிழ் நாட்டில் விவசாய கூட்டுறவு பாங்குகள் அமைக்க அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : நமது தமிழ் நாட்டில் இப்பொழுது 330 விவசாய பாங்குகள் இருந்து கொண்டிருக்கின்றன. அதற்குமேல் அதிகப்படுத்தப்போவதில்லை. முதலில் மத்திய அரசாங்கம் விவசாய பாங்குகள் அமைக்கவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டார்கள். ஆனல் இப்பொழுது அப்படிச் செய்யத் தேவையில்லை என்று கருதி அதற்கு மேல் அதிகமாக விவசாய பாங்குகள் ஏற்படுத்த வேண்டாம் என்று நிறுத்திவிட்டு, கிரெடிட் சொஸைடிகளாக மாற்றிக்கொண்டு வருகிறோம்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : விவசாய பாங்குகள் நல்ல முறை யிலே வேலை செய்து விவசாயிகளுக்கு உதவுகின்ற காரணத்தினுல், மேலும் சில பாங்குகளாகிலும் திறக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன். அப்படி திறக்கிற சமயத்தில் பன்ருட்டியில் ஒரு விவசாய பாங்கு ஏற்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இப்பொழுது விவசாய பாங்குகள் எங்குமே திறக்கப் போவதில்லை என்று நான் முதலில் சொன்னேன். அதை கனம் அங்கத்தினர்

2nd November 1962]

அவர்கள் புரிந்துகொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன். இனி மேல் வரக்கூடிய எல்லா சொஸைட்டிகளும் விவசாய பாங்குகள் என்னென்ன வேலைகள் செய்யுமோ அந்த வேலைகளையும் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. பி. பழனிப்பிள்ளை : எந்தக் காரணத்தைக் கொண்டு இனி மேல் விவசாய பாங்குகளை ஏற்படுத்தவேண்டாம் என்று மத்திய சர்க்கார் கூறினார்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் விளக்கு வார்களா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : சொஸைடிகளாக இருந்தால் உள்ளூரில் இருக்கக்கூடிய மெம்பர் களோடு அதிக தொடர்பு வைத்துக்கொள்ளலாம் என்று கருதி, விவசாய பாங்குகளைவிட இம்மாதிரி லிமிடெட் ஏரியாவை கவர் பண்ணக்கூடிய சொஸைட்டிகள் அமைக்கும் முறை நல்லது என்று சர்க்கார் எண்ணுகிறார்கள்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : இப்பொழுது மேத்தா கமிட்டியின் அறிக்கையின்படி 3,000 ஜனத்தொகையுள்ள கிராமங்களுக்கு மட்டும்தான் கூட்டுறவு சங்கங்கள் புதிதாக அமைக்கவேண்டு மென்று இருக்கிறது. சுமார் 1,000 பேர்களுக்குள்ளாக இருக்கும் கிராமங்களிலும் கூட்டுறவு சங்கங்களை அமைக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : அந்த வகையிலும் அரசாங்கம் யோசனை செய்து கொண்டிருக் கிறது.

கேளிக்கை வரி

*1089 கேள்வி.—**திரு. மு. கருணாநிதி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

1961-ம் ஆண்டில் சினிமா தியேட்டர்கள், டூரிங் சினிமாக்கள் மூலம் கிடைத்த வரியின் மொத்தத் தொகை எவ்வளவு ?

THE HON. SRI R. VENKATARAMAN : The total amount of entertainments and show taxes collected during the year 1961 are Rs. 1,71,35,293 in respect of permanent theatres and Rs. 45,84,120 in respect of touring cinemas.

திரு. மு. கருணாநிதி : மேலும் அதிகமாக வரி விதிக்கலாம் என்று சிபாரிசு செய்யப்பட்டுள்ள உத்தரவு, எத்தனை நகராட்சி மன்றங்களிலும், பஞ்சாயத்துக்களிலும் அமல் செய்யப்பட்டு வருகிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்கு தனிக் கேள்வி போடவேண்டும். அது வேறு இலாகாவைச் சேர்ந்தது.

[2nd November 1962

இலங்கைவாழ் தமிழர்கள்

*1090 **கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இலங்கையில் வசிக்கும் தமிழர்களின் பிரஜா உரிமை விஷயமாகவும், திருப்பி அனுப்பப்படும் தமிழர்களின் புனர்வாழ்வு பற்றியும் இந்த அரசாங்கத்தினை மத்திய அரசாங்கம் கலந்து ஆலோசித்ததா ?

(இ) அப்படியெனின், அதன் விவரமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The question of acquisition of Ceylon Citizenship by persons of Indian origin resident in Ceylon is governed by Ceylon laws. The State Government is generally in touch with the Central Government in regard to various aspects of the problem of such persons to the extent that India is concerned.

The State Government have provided various facilities to help those who have been expelled from Ceylon.

(*b*) A statement [a] showing the relief and rehabilitation measures sanctioned by the State Government on the recommendations of the Special Officer and the Proposals of the Planning Commission is placed on the Table of the House.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இலங்கையிலே வாழ்கிற தமிழர்களுடைய பிரஜா உரிமைப் பிரச்னை பல காலமாகத் தீர்க்கப் படாமல் இருக்கிறது. இந்தப் பிரஜா உரிமைப் பிரச்னையை மத்திய அரசாங்கம் தக்க கவனத்துடன் தீர்க்கவில்லை என்பதை மாநில அரசாங்கம் மேலும் வலியுறுத்துமா ? அப்படி வலியுறுத்தி இலங்கையில் இருக்கிறவர்களுக்கு கூடிய சீக்கிரத்தில் பிரஜா உரிமை கிடைப்பதற்கு ஆவன செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் அவர்களுக்கு மத்திய அரசாங்கத்தை கண்டனம் செய்ய வேண்டுமென்று இருக்கலாம். ஆனால் இந்த அரசாங்கம் அவ்வாறு கருதவில்லை. இது மிகவும் சிக்கலான ஒரு பிரச்னை. மத்திய அரசாங்கம் இந்தப் பிரச்னையில் போதிய கவனம் செலுத்தி சுமுகமாக இதைத் தீர்ப்பதிலேதான் அக்கறை கொண்டிருக்கிறது என்பதை கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய அறிக்கையிலிருந்து இலங்கையிலிருந்து நாடு திரும்பியவர்களின் குழந்தைகளுக்கு, பள்ளிகளிலும், காலேஜுகளிலும் படிக்கிறவர்களுக்கு ஆகும் போர்டிங், லாட்ஜிங் செலவை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என்று தெரியவருகிறது. ஆனால் ஒரு குழந்தையாவது இந்த போர்டிங், லாட்ஜிங் சலுகையைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிற நிலைமை அரசாங்கத்தின்

[a] Printed as Appendix II on pages 516–518.

2nd November 1962]

கவனத்திற்கு வந்திருக்கிறதா? அதற்குக் காரணம் யாருக்கு விண்ணப்பிக்கவேண்டும், அந்தச் சலுகையை எவ்வாறு பெறுவது என்பது அவர்களுக்குத் தெரியவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எந்தெந்தச் சலுகைகளை அரசாங்கம் அளிக்கவேண்டுமென்று கருதுகிறதோ, அந்தச் சலுகைகள் கிடைக்காமல் இருந்தால், குறிப்பாக கனம் அங்கத்தினர்கள் எனக்கு எழுதி அனுப்பினால், அந்தச் சலுகைக்கு உரியவர்கள் அதைப் பெறுவதற்கு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

திரு. எஸ். மாதவன்: இலங்கையிலிருந்து விரட்டியடிக்கப் பட்டவர்களுக்கு தென்னை பயிரிடுவதற்காக நிலம் வழங்கும் திட்டம் எந்தெந்த மாவட்டங்களில் அமலில் இருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்தத் திட்டம் ராமநாதபுரம் மாவட்டத்தில் அமலில் இருக்கிறது.

திரு. எம். வி. கரிவேங்கடம்: மத்திய அரசாங்கம் என்னென்ன நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது, எந்த அளவுக்கு நன்மை பெற்றுத் தந்திருக்கிறது என்பதைப் பற்றி இந்த அரசாங்கத்துக்கு தகவல் வந்திருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இது பொதுவான கேள்வி. மத்திய அரசாங்கம் தொடர்ந்து கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது. அப்போதைக்கப்போது இந்த அரசாங்கத்தையும் கலக்கிறது. இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தைக் கலக்கிறது. குறிப்பாக இதற்கு நான் விடையளிப்பதற்கு இல்லை.

சாலைகள் பராமரிப்பு

*1091 கேள்வி.—**திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி:** கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கொள்ளிடம் இடது கரையில் அணைக்கரையிலிருந்து கிழக்கே கடற்கரைவரை கப்பி போட்டு சாலை அமைக்கும் உத்தேசமுண்டா?

(இ) எப்போது நிறைவேற்றப்படும்?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. கோ. சி. மணி: கொள்ளிடக்கரை அணைக்கரைக்கு கிழக்கேயும், அணைக்கரைக்கு மேற்கேயும் சில இடங்களில் இப்பொழுது சிகப்பு கப்பி போட்டுக்கொண்டிருக்கிறார்களே, அது கரையைப் பலப்படுத்தவா அல்லது பஸ் போக்குவரத்து அமைக்கவா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: கரையைப் பலப்படுத்தி நல்ல முறையில் போக்கு வரத்து ஏற்பட முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். பஸ்கள் ஓட்ட முடியுமா என்பதை பின்னர் பார்த்துக் கொள்ளலாம்.

[2nd November 1962

* 1092 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Works be pleased to state whether there is any proposal for blacktopping the Morappur- Marandahally road in Salem district in 1962–63?

The Hon. Sri V. RAMAIAH : The reaches of the road in miles 0/0 to 12/0, 18/0 to 18/7, 19/0 to 19/3, 28/0 to 32/0 and 33/6 to 34/0 are already blacktopped. . The reach in miles 12/0 to 15/0 is proposed to be black topped in 1962–63. The remaining reaches have water-bound macadam surface and they will also be blacktopped in due course subject to availability of funds.

Naval-ship-boat collision

* 1093 *Q.*—Sri S. MADHAVAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether it is a fact that a naval-ship-boat collision had occurred near Cuddalore on the night of 14th March 1962; and

(*b*) if so, the number of casualties?

The Hon. Sri N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (*a*) Such a collision occurred during the day time on 14th March 1962.

(*b*) One fisherman.

திரு. எஸ். மாதவன் : இந்தப் படகுக் கப்பலின் பெயர் என்ன? இறந்தவரின் குடும்பத்திற்கு அரசாங்கம் என்ன உதவி செய்தது?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : பக்கிரிப் படையாச்சி (வயது 55) என்ற மீனவர்தான் இறந்துவிட்டார். அவருடைய குடும்பத்திலே வேறு யாரும் இல்லை. மகன் இருக்கிறான். ஆனால் மகனுக்கும் தகப்பனாருக்கும் சம்பந்தம் இல்லாமல் இருப்பதினால், சர்க்கார் இதற்கென்று உதவியளிக்கவேண்டிய நிலைமை ஏற்படவில்லை.

திரு. கோ. சி. மணி : தகப்பனுக்கும் மகனுக்கும் சம்பந்தம் இல்லை என்று ரிக்கார்டு பூர்வமாக இருக்கிறதா? அல்லது அரசாங்கம் விசாரித்து "ஓரல்" ஆகத் தெரிந்து கொண்டதா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : எந்த முறையிலே சர்க்கார் விசாரிக்கவேண்டுமோ அந்த முறையிலே தான் விசாரணை செய்தது.

Government offices (introduction of Tamil)

* 1094 *Q.*—Sri K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Finance be pleased to state the steps taken so far to Introduce 'Tamil' in the offices of the Heads of Departments and the Secretariat?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : A statement [a] is placed on the table of the House.

[a] Printed as Appendix III on page 519.

2nd November 1962]

* *1095 கேள்வி.—திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—*

தமிழை ஆட்சி மொழியாகப் பிரகடனப்படுத்தியிருக்கும் அரசு சட்ட மன்ற உறுப்பினர்களிடம் ஆங்கிலத்தில் கடிதப் போக்குவரத்து செய்வதைத் தவிர்க்க உத்தேசமுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : So far, the 'Tamil Scheme' has been introduced in the offices up to and inclusive of the district level, and the communications from such offices will be in Tamil. Communications from the other Government offices will also be in Tamil as and when the scheme is introduced in those offices.

திரு. ஜே. மாதா கவுடர் : தமிழிலே கொடுக்கப்பட்டுள்ள அறிக் கையிலே **Heads of Departments** என்பதற்கு "துறைத் தலைவர்கள் அலுவலகங்களில்" என்று போட்டிருக்கிறது. "தலைமைக் காரியாலயங்களில்" என்று போட்டால் என்ன? "துறைத் தலைவர்கள் அலுவலகங்கள்" என்று சொன்னால் மண்டைக் குழப்பம் ஏற்படுவதாக இல்லையா? (சிரிப்பு). இந்த தமிழ் எப்படி வந்தது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வியாதியைத் தீர்ப்பதற்கு மருந்து சாப்பிட்டால் முதலில் குமட்டுகிறது. அப்புறம் சரியாகப் போய்விடும். அம்மாதிரித்தான் இங்கேயும். "துறைத் தலைவர்" என்ற வார்த்தையில் தவறுதல் ஒன்றுமில்லை. பழக்கத்திற்கு வந்தால் சரியாகப் போய்விடும்.

கல் உடைக்கும் மலைகள்

* 1096 கேள்வி.—திரு. எஸ். முருகையன் (திரு. முனு ஆதி சார்பாக) : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கல் உடைக்கும் மலைகளையெல்லாம் அந்தந்த ஊராட்சி மன் றங்களின் அதிகாரத்திற்கோ அல்லது யூனியன் கவுன்சில் அதிகாரத்திற்கோ விட உத்தேசமுண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir. The matter is under the consideration of the Government.

பாசன வாய்க்கால்கள்

* 1097 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம் : கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) காவிரியின் பழமையான பாசன வாய்க்கால்கள் பூரா வையும் நவீனப்படுத்தும் உத்தேசமுண்டா?

(இ) அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

[2nd November 1962

THE HON. SRI V. RAMAIAH: (அ) & (இ) A scheme for modernising the channels in the old delta area in Thanjavur district under the Cauvery, Vennar and their branches is under investigation by a Special Division of the Public Works Department.

திரு. க. ர. நல்லசிவம்: இதன் மூலமாக புதிய நிலங்கள் ஏதாவது சாகுபடிக்குக் கொண்டுவர முடியுமா? அல்லது பழைய நிலங்களுக்கு நல்ல தண்ணீர் சப்ளை கிடைப்பதற்கு இந்தத் திட்டம் ஏற்பாடாகியிருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமையா: இந்தத் திட்டத்தின் முக்கியமான நோக்கம் என்னவென்றால், அந்த ஜில்லாவிலுள்ள விவசாயிகளுக்கு காலா காலத்தில் தண்ணீர் கிடைப்பதற்கான புது முயற்சியை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்த வேலையைத் தொடர்ந்து செய்யும்பொழுது இன்னும் அதிகமான அளவுக்கு தண்ணீரை அந்த ஜில்லாவில் இருக்கக்கூடிய மற்ற நிலங்களுக்கும் கொடுக்க முடியுமா என்பது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. க. ர. நல்லசிவம்: இதேபோன்று ராஜ்யம் பூராவிலுமுள்ள நதிகளுடைய வாய்க்கால்களை எல்லாம் ஒட்டுமொத்தமாகப் பரிசீலனை செய்து இம்மாதிரி வேலையை மேற்கொள்ளுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. வெ. ராமையா: தஞ்சை ஜில்லாவில் பரிசீலனை செய்யவேண்டுமென்பதே இப் புது முயற்சி. ஆனால் இதில் விசேஷ கவனம் செலுத்தி, இதில் ஏற்படக்கூடிய நல்ல சூழ்நிலை தெரிந்த பிறகு, மற்ற இடங்களுக்கும் பரவலாக விஸ்தரிக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசை. இருந்தாலும் உடனடியாக பெரியார் ஸிஸ்டம் தாம்பிரபாணி ஸிஸ்டம் போன்ற முக்கியமான பகுதிகளுக்கு இந்தப் பரிசீலனையை விஸ்தரிக்க வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் நினைப்பு.

* *1098 கேள்வி.—திரு. சா. ராமசாமி:* கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கொள்ளிடம் ஆற்றில் மஞ்சமேட்டுக்கருகிலிருந்து சினை ஆறு பிரித்து பாசன வசதியளிக்கும் உத்தேசத்துடன் செய்யப்பட்ட சர்வே எந்தக் கட்டத்திலுள்ளது?

(இ) எப்போது வேலை துவங்கப்படும்?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) & (*b*) The scheme is the same as the Marudayar Reservoir Scheme in Udayarpalayam taluk and it has been deferred for the present.

விதைப்பண்ணை

* *1099 கேள்வி.—திரு. இரா. நாராயணன்:* கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

உடையார்பாளையம் வட்டம், செந்துரைகிராமத்தில் விதைப் பண்ணை ஒன்று நிறுவ உத்தேசமுண்டா?

2nd November 1962]

கனம் திரு. பூ. கக்கன் : இல்லை.

* **1100 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தாலுகா, குப்பநத்தம் கிராமத்தில் விதைப் பண்ணை ஏற்படுத்தும் உத்தேசமுண்டா, விவரமென்ன ?

(இ) அப்படியானால், அது சம்பந்தமாய் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

கிராம சாலைகள் திட்டம் (மாணிக்கப்பங்கு கிராமம்)

* **1101 கேள்வி.—திரு. கி. இரா. சம்பந்தம் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாயூரம் தாலுகாவில், தரங்கை மாணிக்கப் பங்கு மீனவர்களுக்காக ரஸ்தா போடுவதும், கப்பி போடுவதுமான திட்டம் எந்த நிலையிலுள்ளது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The work for metalling of the road from Tranquebar to Manickapangu village has already been sanctioned by the Panchayat Union Council, Sembanarkoil under the Village Works Programme and will be executed shortly.

Lorries (accidents)

* 1102 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state the steps taken to control the speed and to improve the condition and upkeep of lorries so as to avoid frequent accidents on the roads?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement [a] is placed on the table of the House.

திரு. வை. சங்கரன் : இப்போது எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும் நடவடிக்கைகளோடுகூட, லாரிகள் போகும் ஸ்பீடை லிமிட் செய்யும் ஒரு கருவியைப் பொருத்தவும், குறிப்பிட்ட அளவு எக்ஸ்பீரியன்ஸ் உள்ளவர்கள்தான் லாரி டிரைவர்களாக அமர்த்தப்பட வேண்டுமென்றும், குறிப்பிட்ட மைல் தூரத்திற்கு மேல் போகக்கூடிய லாரிகளுக்கு இரண்டு டிரைவர்கள் போட்டு நடுவிலே டிரைவரை மாற்றவேண்டுமென்றும் அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஸ்பீடைக் குறைத்து ஓரளவுக்கு மேல் அதிகமான வேகத்தில் ஓட்டாமலிருக்க 'மெகானிகல் டிவைஸ்' அமைப்பதுபற்றிப் பரிசீலனை செய்யப்பட்டு அது

a Printed as Appendix IV on pages 519-520.

சாத்தியமாகத் தோன்றவில்லை என்று முடிவு செய்யப்பட்டது. கனம் அங்கத்தினர் கூறிய மற்ற விஷயங்கள் எல்லாம் கவனிக்கப் பட்டுத்தான் வருகின்றன.

Loans on lands

* 1103 *Q.*—Sri N. P. SENGOTTUVELU : Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether there is any proposal to advance loans on the security of lands newly assigned by the Land Mortgage Banks?

The Hon. Sri N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : The question has not arisen in that form for decision by the Land Mortgage Bank.

திரு. மு. பொ. வடிவேல் : நில அடமான பாங்கில் கடன் பெற்றவர்கள் கடனைத் திருப்பிக் கொடுத்த பிறகுகூட ஐந்து வருஷங்கள் கழித்துப் பங்குத் தொகை வாபஸ் செய்யப்படுகிறது. அவர்கள் நன்மையை உத்தேசித்து கடைசித் தவணையில் பங்குத் தொகையைக் கழித்துக் கொள்ளும்படி செய்ய அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இதனுடைய பொறுப்பெல்லாம் அங்கிருக்கக்கூடிய தலைவர்களுக்கும், உறுப்பினர்களுக்குந்தான். சர்க்காருக்கு அதிலே பொறுப்பு இல்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிற்சாலைகள் (நியமனம்)

* *1104 கேள்வி.*—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தேசிய ஒருமைப்பாட்டை பலப்படுத்த நமது ராஜ்யத்திலுள்ள எல்லாத் தொழிற்சாலைகளிலும் ஜாதி விகிதாசார அடிப்படையில் வேலைக்கு எடுக்க வேண்டி சட்டம் கொண்டுவர உத்தேசமுண்டா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : No, Sir.

பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்

* *1105 கேள்வி.*—**திரு. மு. பொ. வடிவேல் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிராமப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் நிர்வாகஸ்தர்கள் தேர்தல் ஆண்டுக்கு ஒரு முறை நடத்துவதற்குப் பதிலாக மூன்று ஆண்டிற்கு ஒருமுறை நடைபெறவேண்டுமென்று அரசாங்கம் சிபாரிசு செய்திருப்பது உண்மையா?

(இ) அப்படியானல், இம்முறையை அரசாங்கம் துரிதமாக நடைமுறைக்குக் கொண்டுவர முயற்சிக்குமா?

2nd November 1962]

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றின் தற்போதயத் துணை விதிகளின்படி சங்கக் குழுவின் அங்கத்தினர்களை சங்கத்தின் எல்லா அங்கத்தினர்களும் சேர்ந்து ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்க வேண்டும். 1961-ம் ஆண்டு சென்னைக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (புதிய சட்டம்) 27 (3) (எ) பிரிவின்படி, ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் எந்தக் குழுவிற்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினருடைய பதவிக் காலம் மூன்றுண்டுகளென நிச்சயிக்கப் பட்டுள்ளது. ஒவ்வோராண்டும் அக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப் படும் அங்கத்தினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் பதவி யிலிருந்து விலகவும் அதனால் ஏற்படும் காலி ஸ்தானங்களை நிரப்ப வும் புதிய சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

(இ) புதிய சட்டத்தின்கீழ் விதிகள் முடிவாகச் செய்யப்பட்ட வுடன், புதிய சட்டம் அமலுக்குக் கொண்டுவரப்படும்.

திரு. மு. பொ. வடிவேல் : கிராமப் புறங்களில் மாதர் சங்கங்கள் இருக்கின்றன. அவற்றை மாற்றி கூட்டுறவு மாதர் சங்கங்கள் என்று அமைத்தால் பல வகையில் வசதியாக இருக்கும். பல நன்மைகளும் ஏற்படும். அதை அரசாங்கம் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : The question is not very relevant.

Elementary School (Bandahalli)

* 1106 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the Chairman of Nallampally Panchayat Union Council (Dharmapuri taluk) broke open the lock of the Record Box of Bandahalli Elementary School to verify the records when the Headmaster of the School was on casual leave; and

(*b*) if so, what action has been taken in the matter?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : ஸார், இது விஷயமாக அரசாங்கத்திற்கு உபாத்தியாயர்களும், பொதுமக்களும் தெரிவித் திருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். அப்படியிருந்தால் அதன்பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : 'இது விஷயம்' என்று சொன்னல் சரியல்ல. நான் பதில் சொன்னேன்—பஞ்சாயத்து யூனியன் தலைவர் அங்கே சென்று பூட்டை உடைக்கவில்லையென்று. ஆனல் அவர்கள் பள்ளிக்கூடத்தைப் பார்வையிடப் போனர்கள். அப்போது ஹெட்மாஸ்டர் விடுமுறையில் இருந்த காரணத்தால் வரவில்லை. அசிஸ்டெண்ட் ஹெட்மாஸ்டர் மட்டும் இருந்தார். தலைவர் மதிய உணவு சம்பந்தமான கணக்குகளைப் பார்க்கவேண்டு மென்று கூறினர். பெட்டி பூட்டப்பட்டிருந்தால் அசிஸ்டெண்ட் ஹெட்மாஸ்டர் பூட்டை உடைத்துக் கணக்குகளை எடுத்துக்

காட்டினர். கணக்குகளிலே தவறுதல்கள் இருந்த காரணத்தால் அந்த ஹெட்மாஸ்டர் சஸ்பெண்ட் செய்யப்பட்டார். அதுதான் கலெக்டர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

Legislature Library

*1107 *Q.*—Sri C. CHIRANJEEVULU NAIDU: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether there is any proposal to accommodate the entire Legislature Library, now distributed in several rooms in one hall; and

(*b*) if so, when?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Pondicherry and Karaikal (merger with Madras State)

*1108 *Q.*—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. the Chief Minister be pleased to state whether any representation has been made to Union Government, suggesting that the territories of Pondicherry and Karaikal should be merged with Madras State, after *de-jure* transfer is effected?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: No, Sir.

*1109 *Q.*—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government of India have forwarded a copy of the Memorandum presented by Sri V. Subbiah, Leader of the Peoples' Front in Pondicherry Assembly, regarding merger of Pondicherry and Karaikal, with the Madras State, for the remarks of the Madras Government; and

(*b*) if so, the remarks offered thereon?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. மீ. கலியாணசுந்தரம்: பாண்டிச்சேரி-காரைக்கால்பற்றி சமீபத்தில் பார்லிமெண்டில் சட்டம் இயற்றுவதற்கு முன்பு நம்முடைய அரசாங்கத்தை பிரதம மந்திரி உத்தியோக முறையிலோ, தனிப்பட்ட முறையிலோ கலந்து ஆலோசித்தது உண்டா? அப்போது என்ன அபிப்பிராயம் கூறப்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அம்மாதிரி இந்த அரசாங்கத்தைக் கலந்தாலோசிக்க வேண்டிய அவசியமில்லை.

கரும்பு அபிவிருத்தித் திட்டம் (சாலைகள் அமைத்தல்)

*** 1110 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கரும்பு அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கடலூர் தாலூகாவில் மேல் குமாரமங்கலம் பகண்டை ரோடு முடிவடையாமல் இருப்பதற்குக் காரணமென்ன?

2nd November 1962]

THE HON. SRI P. KAKKAN : The land acquisition proceedings in respect of this work have not yet been completed by the Revenue Department. As soon as the same is completed, the road-work under reference will be taken up for execution.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் சபாநாயகர் அவர்களே, ஏறக்குறைய ஐந்து வருஷ காலத்திற்கு முன்பாக 70,000 ரூபாய் செலவில் இந்த ரோடு போட ஆரம்பிக்கப்பட்டும், இன்னும் பொது மக்களுக்குக் கொஞ்சம்கூட உபயோகப்பட முடியாத நிலையில் இருக்கிறது. ஒரு தனி நபர் அமைச்சரைக் கண்டுகொண்ட காரணத்தினால்தான் இந்த ரோடு நின்று விட்டது . . .

MR. SPEAKER : I don't allow this question.

Neyveli-Salem railway line

* 1111 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have recommended to the Centre to lay a broad-guage railway track from Neyveli to Salem?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir.

Industries (private sector)

* 1112 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to grant licence, for the manufacture of "super high draft ring frames" in the private sector in our State; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) A private sector industrial concern has applied to Government of India for a licence under the Industries (Development and Regulation) Act to set up an undertaking for the manufacture of 'High Draft speed frames' and other items of textile machinery.

(*b*) As the application relates to private sector the details cannot be furnished.

* *1113 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

மதுரையில் தனியார் துறையில் தையல் ஊசி தயாரிப்பு தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்க உத்தேசமுண்டா? அப்படியானால் எப்போது ஆரம்பிக்கப்படும்?

THE HON. SRI R. VENKATARAMAN : A private sector concern proposes to set up a factory in Madurai for the manufacture of sewing machine needles. Government have no information as to when it will go into production.

[2nd November 1962

* *1114 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :* கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், வேதாரண்யத்தில் ரூப்பர் பால் பேட் உற்பத்தி தொழிற்சாலே துவங்குவதற்கு தனியார் துறைக்கு அனுமதி வழங்கப்பட்டது உண்மையா ?

(இ) அப்படியென்ருல், அத்தொழிற்சாலே எப்போது துவங்கப்படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) No, **Sir.**

(இ) Does not arise.

Members of Legislature (supply of service stamps)

* 1115 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there is any proposal to supply service stamps to the Members of Legislature for their correspondence; and

(*b*) if so, when?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Russian language (teaching)

* 1116 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to teach Russian language in any of the schools in the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

மேட்டூர் அணை

* *1117 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :* கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சமீபத்தில் காவேரி நதியில் வெள்ளம் வந்து மேட்டூர் அணை திறந்துவிடப்பட்டதா ?

(இ) திறந்துவிடப்பட்ட தண்ணீர் கீழ்மட்டத்தில் உபயோகிக்கப்பட்டதா ?

THE HON. SRI V. RAMAIAH : (அ) Yes, Sir.

(இ) Yes, Sir.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் சபாநாயகர் அவர்களே. வீணைகப் போகும் தண்ணீரை வேறு உபயோகத்திற்கு உபயோகப்படுத்த அரசாங்கம் ஏதேனும் திட்டமிட்டிருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினருடைய கேள்வியின் இரண்டாவது பிரிவுக்கான பதிலைக் கவனித்திருந்தாலே தெரிந்திருக்கும். திறந்து விடப்பட்ட தண்ணீர் கீழ் மட்டத்தில் பயன்படுத்தப்படுகிறது.

Fishermen (Nanguneri taluk)

* 1118 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether any representation in person and in writing has been made to the Revenue Divisional Officer, Shermadevi and the Collector, Tirunelveli regarding famine conditions of the fishermen in the Coastal village of Nanguneri taluk, Tirunelveli district; and

(*b*) the action taken thereon?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Panchayats

* 1119 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have taken any steps to ensure that pressures of party politics do not disrupt the activities and the constructive role of panchayats?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir.

திரு. வை. சங்கரன் : பஞ்சாயத்துத் தேர்தலில் ஈடுபடுகிறவர்கள் கட்சி சார்பில் நிற்காமல் சைக்கிள் சின்னம், குடைச் சின்னம் வைத்துக்கொண்டு நின்றாலும், ஓட்டுப் போடும்போது அந்தந்தக் கட்சி ஆதரவாளர்கள் வெளிப்படையாகக் கட்சி சார்பில் வேலை செய்யக்கூடிய நிலைமை இருப்பதால், இதைத் தடுக்க, அபேட்சகர்களிடம் 'ஒரு கட்சியின் ஆதரவைப் பெற மாட்டோம்' என்ற முறையில் ஒரு உறுதி மொழிப் பத்திரம் வாங்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறெல்லாம் உறுதி மொழிப் பத்திரம் வாங்க உத்தேசமில்லை. அப்படிச் செய்வது முறையல்ல. ஆனால் எல்லாக் கட்சிகளும் சேர்ந்து, பஞ்சாயத்துத் தேர்தலில் கட்சி ரீதியில் ஈடுபடுவதில்லையென்று முடிவு செய்து கொண்டால் நல்லது. காங்கிரஸ் கட்சி அத்தகைய வழியைக் காட்டியிருக்கிறது. மற்றக் கட்சியினரும் அதை ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்று நம்புகிறேன்.

திரு. ம. கமலநாதன் : தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் இந்தச் சமயத்தில், பஞ்சாயத்து ஆக்கப் பணியில் ஈடுபட்டிருக்கும் என் போன்ற பிரிவினை எண்ணம் கொண்டவர்களுக்குச் சில சங்கடங்கள் ஏற்படுவதால் இதிலே அரசியல் புகும் என்று கருதுகிறேன். இதுபற்றி அமைச்சரவர்களுடைய கருத்தென்ன ?

[2nd November 1962

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒருமைப்பாடு என்பது அரசிய
10-00 a. m. லுக்கு அப்பாற்பட்டது என்று முன்பே தெரிவித்திருக்கிறேன். கனம் அங்கத்தினரைப் போன்றவர்களுக்குப் பிரிவினை அபிப்பிராயம் உண்டு என்றால், அத்தகையோருக்கு இதிலே இடமில்லையென்றுதான் சொல்லவேண்டும்.

பீடிகள் (ஏற்றுமதி)

* **1120 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பாகிஸ்தானிலிருந்து வாங்கும் பஞ்சுக்குப் பதிலாக இந்தியாவிலிருந்து கொடுக்கும் நிலக்கரியோடு, தமிழ்நாட்டில் தயாராகும் பீடியையும் கொடுப்பதற்கான ஏற்பாடு செய்யும்படி மத்திய சர்க்காரை ராஜ்ய சர்க்கார் கேட்டுள்ளதா ? விவரமென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

Soil Conservation Scheme

* 1121 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal to revise the rates of Rs. 15 and Rs. 17 being paid per unit under the soil conservation scheme; and

(*b*) if so, when?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : தர்மபுரி தொகுதியில் இம் மாதிரி யூனிட்டுக்கு 15 ரூபாய், 17 ரூபாய் என்று இருப்பது மிகக் குறைவாக இருக்கிறதென்றும் அதை உயர்த்தவேண்டுமென்றும் கோரிக்கை வந்துள்ளதா ? அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தக் கோரிக்கையைப் பரிசீலனை செய்து பார்த்த பிறகு அதை உயர்த்த முடியாது என்று முடிவெடுக்கப்பட்டது.

சுதந்திரம் காக்கும் படை

* **1122 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திராவிடநாடு வாரம் கொண்டாடும் திராவிட முன்னேற்றக் கழகத்தினரை தடுத்து நிறுத்த "சுதந்திரம் காக்கும் படை" ஒன்று சென்னையில் நிறுவப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆம். இந்த ஸ்தாபனத்தின் நடவடிக்கைகள் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்துள்ளன.

திரு. மு. கருணாநிதி : தேசிய சின்னங்கள் பாதுகாப்புச் சட்டத்திற்கு எதிராக மேற்படி படையினர் தேசியக் கொடிகளைப் பிடித்துக்கொண்டு தங்கள் கட்சிக்கு எதிரான கட்சிகளின் கூட்டங்களில் ஆர்ப்பாட்டம் செய்வது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தேசியக் கொடிகளை வைத்துக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தார்களா இல்லையா என்பது பற்றிய விவரம் என்னிடம் இல்லை. இந்தப் படையினரை ஒரு புதிய தேசியக் கட்சியாக அரசாங்கம் கருதவில்லை.

Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Act

* 1123 Q.—SRI K. A. MATHIALAGAN : Will the **Hon. the** Minister for Industries be pleased to state—

(*a*) how far the Government have been successful in implementing the Beedi Industries Premises (Regulation of Conditions of Work) Act; and

(*b*) the steps taken to prevent the Trade Mark Beedi Proprietors from taking benami licences in the name of beedi agents and their workers?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Only the licensing provisions of the Act are in force now and these have been implemented successfully. During the nine months of the year 1960-61, 1,830 licences were issued to the employers of beedi industrial premises and during the year 1961–62, 289 employers were granted licences besides 1,216 employers, whose licences were renewed.

(*b*) The matter is under the consideration of the Government.

MR. SPEAKER : I think the House has no objection to taking some more time to dispose of the remaining questions.

பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மாநாடு

* ***1124*** *கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—*

1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 15-ம் தேதியில் திருச்சியில் நடந்த தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் அரசாங்கத்திற்கு வந்ததா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆம்.

பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் கமிட்டிக் கூட்டம்

** 1125 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—*

(அ) 1962-ல் ஜூலை கடைசி வாரத்தில் சென்னையில் கூடிய ராஜ்ய பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் கமிட்டிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் அரசாங்கத்திற்கு வந்தனவா ?

(இ) அப்படியானல் அவைகளின்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) The action taken on the various recommendations made in the meeting will be intimated to all members in due course.

Bee-keeping centre for Hogainakkal

* 1126 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether it is a fact that the opening of a Bee-keeping Centre at Hogainakkal in Salem district is under the active consideration of the Government; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) There is no proposal under the consideration of the Government or the State Khadi and Village Industries Board for starting a Bee-keeping Centre at Hogainakkal in Salem district. However, there is a Bee nursery functioning at Hogainakkal since January 1959.

(b) So far 234 Bee colonies have been supplied from the existing Bee nursery at Hogainakkal to outside blocks from the inception of the scheme up to June 1962 and 20 fieldmen have been given training in bee-keeping methods.

Legislative Council (Composition) Bill, 1962.

* 1127 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the State Government have forwarded their views to the Union Government regarding the Legislative Councils (Composition) Bill, 1962, which has been introduced in the Lok Sabha; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) Does not arise.

பால் வழங்கு சபை

* *1128 கேள்வி.*—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் மாநில பால் போர்டு அமைக்க அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

(இ) அப்படியென்றல், அந்த போர்டின் அலுவல்கள் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) சட்டப்படி அமைந்த பால் வழங்கு சபை Statutory Milk Board ஒன்றை இம் மாநிலத்தில் அமைக்கும் பிரச்சனை *1963-64*-ல் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

2nd November 1962]

Huts in panchayat areas (exemption from tax)

* 1129 Q.—Sri R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to exempt huts in the panchayat areas from the imposition of tax; and

(b) if so, the details thereof?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (a) No, Sir.

(b) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: பஞ்சாயத்து ஆக்ட் 1950-ன் படி குடிசைகளுக்கு வரி விதிக்கக்கூடாது என்று இருந்தது. 1958 ஆக்டில் வரி விதிக்கலாம் என்று சொல்லப்பட்டுவிட்டது. இதனால் ஏழைகளின் குடிசைகளுக்குக்கூட வரி விதிக்கிறார்கள். ஏழைகள் பாதிக்கப்படுவதால், பஞ்சாயத்துக்களில் இருந்து கோரிக்கைகள் வந்தால் இவற்றுக்கு அரசாங்கம் விதிவிலக்கு அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: முன்பு இல்லாத ஒரு ப்ரொவிஷன் இந்தச் சட்டத்தில் இருக்கிறது என்றால் அதற்கு இந்தச் சட்டமன்றத்தைதான் கேட்கவேண்டும். இதிலே குடிசைகளுக்குக்கூட வரியா என்றால் குடிசைகூட இல்லாதவர்கள் இருக்கிறார்கள். ஆகவே இவர்களும் தங்களுக்கு முடிந்த ஒரு சிறு பங்கையாவது செலுத்தவேண்டும் என்றுதான் இவ்வாறு செய்யப்பட்டது.

அனல் மின்சார நிலையம்

* 1130 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையில் தனியார் துறையில் அனல் மின்நிலையம் ஒன்று ஆரம்பிப்பதற்கு சர்க்கார் அனுமதித்துள்ளதா?

(இ) அப்படியென்றால் எவ்வளவு தொகையில்?

(உ) இந்த நிலையத்தில் ஆண்டு ஒன்றுக்கு எத்தனை கிலோ வாட் மின்சாரம் உற்பத்தியாகும்?

The Hon. Sri R. VENKATARAMAN: (அ) The Government have received a proposal sponsored by a group of industrialists to set up a thermal power station in private sector near Madras primarily to meet their own power requirements. This proposal has the support of this Government. It is proposed to address the Government of India for their approval of this scheme.

(இ) According to the sponsors the project may cost about rupees 6 crores.

(உ) The installed generating capacity of the station will be 60 M.W.

[2nd November 1962

திரு. வை. சங்கரன்: ஏற்கனவே இதுசம்பந்தமாக மத்திய அரசாங்கத்தார் தனியார் துறையில் அனல் மின்நிலையம் ஏற்படுத்துவதற்கு அனுமதி தர மறுத்தார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்தத் திட்டத்தை ப்ளானிங் கமிஷன் ஏற்றுக்கொள்ளவில்லை. மத்திய சர்க்காரினுடைய தொழில் கொள்கை அடிப்படையில் மின்சார உற்பத்தி சர்க்கார் துறையில்தான் இருக்கவேண்டுமென்று முடிவுசெய்தார்கள்.

முந்திரிச்சாகுபடி

*1131 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் முந்திரிச் செடி பயிர் செய்வதற்காக எத்தனை ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டன?

(இ) அழிப்பதற்கு ஆன செலவு என்ன?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) & (இ) இராமநாதபுரம் மாவட்டத்தில் முந்திரிச் செடிகளைப் பயிரிடுவதற்காகக் காடுகள் அழிக்கப்படவில்லை. ஆனால், முந்திரிச் செடிகளை நடுவதற்கு முன் இம்மாவட்டத்திலுள்ள அழிந்துபோன முன்னாள் ஜமீந்தாரிக் காடுகளிலுள்ள புதர்களும், தரம் குறைந்த சிறு மரங்களும் அகற்றப்படுகின்றன.

*1132 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் எத்தனை ஏக்கர்களில் முந்திரிச் செடி உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது?

(இ) சென்ற ஆண்டில் அதற்கான செலவென்ன?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) விவசாய இலாகாவால் நிறைவேற்றப்பட்டுவரும் முந்திரி அபிவிருத்தி திட்டத்தின்கீழ் கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் 73 ஏக்கர் நிலம் முந்திரிச் சாகுபடியின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் காட்டு இலாகாவால் நடத்தப்பட்டுவரும் ஒரு திட்டத்தின்கீழ் 4,301 ஏக்கரா காட்டு நிலம் முந்திரிச் சாகுபடியின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

(இ) விவசாய இலாகாவால் நிறைவேற்றப்பட்டுவரும் திட்டத்தின் கீழ் 1961-62-ம் ஆண்டில் விவசாயிகளுக்கு கடனாக ரூ. 5,860 அளிக்கப்பட்டது.

1961-62-ல் காட்டு இலாகாவால் ரூ. 71,605 முந்திரி பயிருக்காகச் செலவழிக்கப்பட்டுள்ளது.

2nd November 1962]

திரு. கரு. சீமைச்சாமி : இராமநாதபுரத்தில் ஏராளமான ஏக்கரா தரிசு நிலங்கள் இருப்பதால் அந்தப் பகுதியில் முந்திரி அதிகம் பயிரிடும் திட்டத்தை விஸ்தரிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : கிழக்கு இராமநாதபுரத்தில், சிலோனில் இருந்து வந்தவர்களுக்கு உதவி செய்வதற்காக ஏற்பாடு செய்யும் முறையில் முந்திரி பயிர் வைக்கும் திட்டத்தை எடுத்துக் கொண்டோம். எங்கெல்லாம் இன்னும் வசதி இருக்கிறதோ அங்கெல்லாம் ஏற்படுத்தப்படும்.

** 1133 கேள்வி.*—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** *கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) முந்திரி ஏற்றுமதிக் கவுன்சில் திட்டப்படி தென்னாற்காடு மாவட்டத்தில் எவ்வளவு விஸ்தீரணத்தில் புதிதாக முந்திரி பயிரிடப்பட்டது ?

(இ) அந்தப் பகுதியில் முந்திரிக்கு நோய் ஏற்பட்டு காய்க்காமல் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(உ) அதற்கான காரணமும், தடுப்பு நடவடிக்கையும் என்ன ?

THE HON. SRI P. KAKKAN : (அ) & (உ) A paper [a] is placed on the Table of the House.

** 1134 கேள்வி.*—**திரு. முனு. ஆதி :** *கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

வண்டலூரில் முந்திரி பயிரிடுதல் பற்றி ஆராய்ச்சி நடத்த ஒரு ஆராய்ச்சி கேந்திரம் நிறுவப்பட்டுள்ளதா ? விவரமென்ன ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : ஆம், ஐயா.

இந்த ஆராய்ச்சிக் கேந்திரத்தில் நடத்தப்படும் ஆராய்ச்சிகள் பின்வருமாறு—

மிகச் சிறந்த முறை, காலம், செடிகளை இடைவெளி விட்டு நடும் முறை, முந்திரி பயிர் செய்வதற்கு தகுந்தாற்போல் மண்ணை வளப்படுத்தும் பல்வேறு முறைகள், வண்டலூரில் முந்திரிச் செடிகளின் உரத் தேவைகள், உயர்ந்த ரக விதைகளைத் தயாரித்தல் முதலிய ஆராய்ச்சிகள்.

*1135 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal to start a pilot project for cashew cultivation in Ramanathapuram district; and

(*b*) if so, the details thereof?

a Printed as Appendix V on page 520—521

[2nd November 1962

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

காடுகள் (உளுந்தூர்பேட்டை)

* *1136* **கேள்வி.—கு. கோபால கவுண்டர்:** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உளுந்தூர்பேட்டை வட்டாரத்திலிருக்கும் காடுகளை வெட்டிச் செல்ல, கண்ட்ராக்டுக்கு விடப்பட்டதா?

(இ) அதன் மூலம் அரசாங்கத்திற்கு கிடைத்த மொத்த தொகை எவ்வளவு?

(உ) எவ்வளவு காலம்வரை கண்ட்ராக்டர்கள் மரங்களை வெட்டிச் செல்லும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) ஆம், ஐயா.

(இ) 1957-58-லிருந்து 1962-63 வரை கிடைத்த தொகை ரூ. 11,177.

(உ) ஒவ்வொரு வருடமும் எட்டு மாதங்கள்—அதாவது ஏப்ரல் முதல் தேதியிலிருந்து நவம்பர் 30-ம் தேதி வரை.

Text Books (Standardization)

* 1137 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state the progress made so far regarding standardization of text books for the primary school classes?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Text books in English for Standards V, VI and VII; Text books in Tamil, Telugu, Malayalam, Urudu and Non-detailed Text-Books in English, Tamil, Telugu, Malayalam and Urudu for Standard VII have been published by the Government so far.

விசாரணைக் கைதி (மரணம்)

* *1138* **கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திராவிட முன்னேற்றக் கழகத்தின் விலைவாசி குறைப்பு போராட்டத்தில் கைது செய்யப்பட்டு விசாரணைக் கைதியாக மதுரை மத்திய சிறையில் வைக்கப்பட்டிருந்த எவரேனும் மரணமடைந்தாரா?

(இ) அப்படியானால், அவர் இறந்ததின் காரணமென்ன?

2nd November 1962]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) இல்லை. ரிமாண்ட் கைதி நெ. 510, பொற்செழியன் என்பவர் ஜாமீனில் விடுதலை செய்யப் பட்டு 23—8—1962 இரவு 10-30 மணிக்கு மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் இறந்துபோனார்.

(இ) குடல் புண் சுரம் கண்டு இரத்தம் வெளிப்பட்டதன் (Enteric with Haemorrhage) காரணமாக அந்தக் கைதி இறந்து போனார்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: இறந்துபட்ட பொற்செழியன் என்ற திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர் தனக்கு வயிற்றுக் கடுப்பு ஏற்பட்டிருக்கிறதென்றும், ஆகையால் தன்னை ஜாமீனில் விடவேண்டுமென்றும் கோர்ட்டிலே மனுக் கொடுத்த சமயத்தில் அரசாங்கத்தரப்பில் இருந்து அவருக்கு ஜாமீனில் விடுதலை அளிக் கக்கூடாது என்று அரசாங்கம் வற்புறுத்தியது உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : என்னிடம் இருக்கும் தகவல் பிரகாரம்—அவருக்கு வயிற்றுக் கடுப்பு ஏற்பட்டது என்று தெரிந்ததும் முதலில் ஜெயில் ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப் பெற்றது. அப்புறம் மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டார். உடனடியாக அவரது உறவினர்களுக்கு இதுபற்றிய தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் ஜாமீனில் விடுதலை கோரிய போது விடுதலையும் அளிக்கப்பட்டு, அத்தகவல் அவருக்கு ஆஸ்பத் திரியில் தெரிவிக்கப்பட்டது. அவர் விடுதலை செய்யப்பட்ட 23-ம் தேதி அன்று இரவுதான் இறந்தார்.

திரு. மு. கருணாநிதி : ஜெயில் ஆஸ்பத்திரியில் காலத்தில் தக்க சிகிச்சைகள் செய்யாத காரணத்தால்தான் அவருடைய உடல் நிலை மோசமாயிற்று என்பது அரசாங்கத்திற்கு தெரியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றும் தகவல் இல்லை. ஜெயில் ஆஸ்பத்திரியில் எவ்வளவு தூரம் சிகிச்சை செய்ய முடியுமோ அவ்வளவும் செய்யப்பட்டது. பெரிய ஆஸ்பத்திரிக்கு அனுப்ப வேண்டியதின் அவசியத்தை உணர்ந்துதான், அங் கிருந்து உடனடியாக மதுரை பெரிய ஆஸ்பத்திரிக்கு அவரை அனுப்பினார்கள்.

திரு. இராம அரங்கண்ணல் : அவருக்கு டைஃபாய்டு காய்ச்சல் ஏற்பட்டிருக்கிறதென்று தெரிந்திருந்தும் அவரை ஏன் உடனடி யாக மருத்துவ மனையில் சேர்க்கவில்லை?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சிறை ஆஸ்பத்திரியில் முதலில் சிகிச்சை பெற்றார். அதற்குப் பிறகு எர்ஸ்கின் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார்.

திரு. எஸ். மாதவன் : மதுரை மத்திய சிறையில் 'கப்பாஸிடி'க்கு மேலாக கைதிகளை அடைத்து வைத்திருந்ததால் சுகாதாரக் குறைவு ஏற்பட்டு, அதன் காரணத்தால்தான் பொற் செழியன் என்ற தோழருக்கு இந்தக் கதி ஏற்பட்டது என்பதை அரசாங்கம் உணருகிறதா?

[2nd November 1962

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதுவரையுள்ள வைத்திய ஆராய்ச்சியில், 'கூட்டம் அதிகமாக இருந்தால் இம்மாதிரி காய்ச்சல் வரும்' என்று கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

திரு. எம். வி. கரிவேங்கடம் : அவர் எப்போது கைது செய்யப்பட்டார்? அவர் பேரில் சார்ஜ்ஷீட் எப்போது போடப்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆகஸ்டு 3-ம் தேதி அவர் மத்திய சிறைக்கு அனுப்பப்பட்டார். ஆகஸ்டு 17-ந் தேதி ஜெயில் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

Marine Diesel Engine Factory

* 1139 *Q.*—Sri S. MADHAVAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to start a Marine Diesel Engine Factory in the State; and

(*b*) if so, when and where?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) Government of India have under consideration a proposal to establish an industrial undertaking at Ernavur for the manufacture of marine diesel engines.

திரு. எஸ். மாதவன் : இதற்குச் செலவழிக்கத் திட்டமிடப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு? அதிலே மரைன் டீஸல் இன்ஜின்களைத் தவிர வேறு என்ன என்ன பொருள்களைத் தயாரிப்பது என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : செலவு எவ்வளவு என்பதற்கு மத்திய சர்க்காரைக் கேட்கவேண்டும். அது மத்திய சர்க்கார் திட்டம். டீஸல் இன்ஜின் தவிர, இன்னும் 'ஸ்மால் நேவல் க்ராஃப்ட்' தயார் செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

Gold (Dharmapuri taluk)

* 1140 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any survey for gold was conducted in Suppergatta near Nekkundhi in Dharmapuri taluk in 1961; and

(*b*) if so, the results thereof?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) The area around Nekkundhi in Dharmapuri taluk was mapped by the Geological Survey of India during 1961–62. No occurrence of gold in the vicinity of Suppergatta was observed.

2nd November 1962]

ஆசிரியர் பயிற்சிப் பள்ளி (சித்தர் கோயில்)

*1141 கேள்வி.—திரு. சோ. ஆறுமுகம்: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் வீரபாண்டி தொகுதி சித்தர் கோயில் கிராமத்தில் ஒரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி துவக்க உத்தேசம் உண்டா?

(இ) அப்படியானல் எப்பொழுது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) இல்லை, ஐயா.

(இ) எழவில்லை.

திரு. சோ. ஆறுமுகம்: சேலம் மாவட்டத்தில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் குறைவாக இருப்பதன் காரணமாக அங்குள்ள மாணவர்கள் இரண்டு ஆண்டுகள், மூன்று ஆண்டுகள் கூட பயிற்சிப் பள்ளிகளில் இடம் கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். இதைப் பரிசிலனை செய்து, அங்கு இன்னும் அதிகமான ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை ஏற்படுத்த சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எந்தெந்த மாவட்டத்தில் எத்தனை மாணவர்கள் இடம் கிடைக்காமல் இருக்கிறார்கள் என்பதல்ல கவனிக்கப்பட வேண்டிய விஷயம். எந்த எந்த மாவட்டத்தில் இன்னும் எத்தனை பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தேவை என்பதுதான் முக்கியம். மேலும் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தேவையாக இருந்தால், புதிய பயிற்சிப் பள்ளிகள் அனுமதிக்கப் படுகின்றன. மேலும் பயிற்சிப் பள்ளிகள் அனுமதிக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை என்று தோன்றியதால்தான், கனம் அங்கத்தினர் குறிப்பிட்ட ஊரில் இந்தப் பள்ளி அனுமதிக்கப்பட வில்லை.

பஞ்சாயத்து யூனியன் (பணம் கையாடல்)

*1142 கேள்வி.—திரு மு. செல்லய்யா: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுக்கா வத்திராயிருப்பு பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த இரண்டு பஞ்சாயத்து போர்டு தலைவர்கள் பணம் கையாடல் செய்ததாக சர்க்காருக்குப் புகார் வந்திருக்கிறதா?

(இ) அதன்மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) வத்திராயிருப்பு பஞ்சாயத்து யூனியன் பகுதியில் பஞ்சாயத்துப் பணத்தைக் கையாடியதாக இரண்டு கேஸுகள் அறிவிக்கப்பட்டுள்ளன—ஒன்று கஞ்சாபுரம் பஞ்சாயத்திலிருந்து, மற்றொன்று புதுப்பட்டி பஞ்சாயத்திலிருந்து.

(இ) கஞ்சாபுரம் பஞ்சாயத்தைப் பொறுத்தவரையில் பஞ்சாயத்துப் பணத்தைக் கையாடியதற்குப் பஞ்சாயத்துத் தலைவர் பொறுப்பாளியல்ல என்று கணக்குத் தணிக்கையிலிருந்து தெரிந்தது. புதுப்பட்டிப் பஞ்சாயத்துத் தலைவர் பஞ்சாயத்துப் பணத்திலிருந்து 7 ரூபாய் தற்காலிகமாகக் கையாடியுள்ளதாக தெரிகிறது. அதற்காகவும், மற்றும் சில ஊழல்களுக்காகவும் அந்தப் பஞ்சாயத்துத் தலைவரைப் பதவியை விட்டு நீக்க நடவடிக்கை எடுத்து வரும்போது, அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனல், பஞ்சாயத்து தலைவர் உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்த ரிட் மனுவின்மேல் உயர்நீதி மன்றம் ரிட் மனு பைசலாகும்வரையில் அவர் மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஆஸ்தான கவிஞர்கள்

*1143 *கேள்வி.—திரு. டி. கார்ச்சா கவுடர் : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

அரசாங்கத்தின் செலவில் ஆஸ்தான கவிஞர்கள் யாரேனும் நியமிக்கப்பட்டுள்ளனரா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இல்லை, ஐயா.

திரு. டி. கார்ச்சா கவுடர் : *நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, நமது அரசாங்கம் ஆஸ்தான கவிஞர்களாக யாரையாவது நியமித்திருக்கிறதா ? நியமித்திருந்தால், யார் யார் என்று அறிவிக்க முடியுமா ?*

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒரு முறை ஆஸ்தான கவிஞர்கள் நியமிக்கப்பட்டார்கள். தமிழுக்கும், மலையாளத்திற்கும், கன்னடத்திற்கும், சமஸ்கிருதத்திற்கும், தெலுங்கிற்கும் ஆஸ்தான கவிஞர்கள் நியமிக்கப்பட்டார்கள். தமிழைப் பொறுத்தவரையில், நாமக்கல் கவிஞர் திரு. இராமலிங்கம்பிள்ளை அவர்கள் ஆஸ்தான கவிஞராக நியமிக்கப்பட்டிருந்தார்.

Salem district (bifurcation)

*1144 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the details of the proposal to bifurcate Salem district; and

(*b*) whether a copy of the report of the Special Officer appointed for that purpose will be placed in the Legislature Library?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) A Special Officer in the grade of Collector has been appointed to work out the scheme for bifurcation of Salem district territorially. The report of the Special Officer is awaited.

2nd November 1962]

(b) The question of placing a copy of the report of the Special Officer in the Legislature Library will be considered after orders are passed on the report of the Special Officer.

திரு. ம. கமலநாதன் : 'ரிப்போர்ட் ஏற்கனவே வந்துவிட்டது' என்று சொல்லப்படுகிறது. அப்படியென்றால், எந்தத் தேதியில் அது அறிவிக்கப்படும் என்று அறியலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் கொடுத்த விடையில் 'ரிப்போர்ட் இன்னும் வரவில்லை' என்று சொன்னேன். 'சொல்லப் படுகிறது' என்று சொன்னால், அதற்கு நான் என்ன விடை அளிக்க முடியும் ? ரிபோர்ட் வந்த பிறகு, லெஜிஸ்லேச்சர் லைப்ரரியில் அது வைக்கப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : விவரங்களைப் பற்றி அரசாங்கம் உத்தரவிடுவதற்கு முன்பு அந்த மாவட்டத்தைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர்கள், பார்லிமெண்ட் உறுப்பினர்கள் ஆகியவர் களைக் கலந்து கொண்டு, இதுபற்றி முடிவு எடுக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி தனியாகக் கேள்வி வேண்டும்.

பஞ்சாயத்துக்கள்

* 1145 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் முதலமைச் சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் பனையூர் பஞ்சாயத்து உறுப்பினர் கள், தலைவர் அனைவரும் ஏககாலத்தில் ராஜிநாமா செய்தார்களா ?

(இ) ஆம் எனில் காரணம் என்ன ?

(உ) அந்தப் பஞ்சாயத்து கலைக்கப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) ஆம். மதுரை மாவட்டம் பனையூர் பஞ்சாயத்து உறுப்பினர்கள், தலைவர் அனைவரும் ஏக காலத்தில் 21—12—1960-ல் ஒரு தீர்மானம் மூலம் ராஜிநாமா கொடுத்தனர்.

(இ) பஞ்சாயத்து எல்லைக்குள் நடக்கும் கள்ளச் சாராயம் இறக்குதல், சூதாட்டம் இவைகளைப் பற்றிய பஞ்சாயத்தின் 27—11—1960-ம் தேதிய தீர்மானம் நம்பர் 27-ன் மேல் சம்பந்தப் பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காதது காரணம்.

(உ) ஆம்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : பஞ்சாயத்துக்கள் எடுத்துக்கூறு கின்ற குற்றங்குறைகளைக் களைய அரசாங்க அதிகாரிகள் சரியாக நடவடிக்கை எடுக்காத காரணத்தினால்தான், பனையூர் பஞ்சா யத்து உறுப்பினர்கள் தங்கள் பதவிகளை ராஜிநாமா செய்தார்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இனிமேலாவது அவ்வாறு பஞ்சாயத்து உறுப்பினர்கள் ராஜிநாமா செய்யாம லிருக்க அவர்கள் கூறும் குற்றங்குறைகளை அரசாங்க அதிகாரிகள் உடனுக்குடன் கவனிப்பார்களா ?

[2nd November 1962

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பஞ்சாயத்து கவனிக்க வேண்டிய விஷயங்கள்வேறு. அவர்களுடைய துறைக்குப் புறம்பான விஷயங்களாக இல்லாதவற்றில், ஏதாவது தவறு நேர்ந்தால் அதை எடுத்துக்காட்டலாம். கண்டனம் தெரிவிக்கும் வகையில் ராஜினமா செய்தார்கள் என்பது முறையல்ல. மேலும், இந்தப் பஞ்சாயத்தைப் பொறுத்தவரையில், வேறு பல வகைகளிலே, சட்டத்திற்கும் முறைக்கும் விரோதமாக அவர்கள் நடந்து கொண்டிருந்தார்கள் என்று கலெக்டரே அந்தப் பஞ்சாயத்துக்கு நோட்டீஸ் கொடுத்து, "அந்தப் பஞ்சாயத்தை ஏன் ஓர் ஆண்டுக்குக் கலைக்கக்கூடாது" என்று கேட்டிருந்தார்கள். அதற்கு பதில் வரவில்லை. ஆனல், வேறு ஏதோ காரணத்தை வைத்து பஞ்சாயத்து உறுப்பினர்கள் ராஜினமா செய்திருக்கிறார்கள்.

* 1146 கேள்வி.—திரு. சா. ராமசாமி : கனம் முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கீழப்பழுவூர் பஞ்சாயத்தை இரண்டாகப் பிரிக்கும்படி கோரி விண்ணப்பங்கள் வந்துள்ளனவா ?

(இ) அங்குள்ள மக்கள் கணக்கீட்டின்படி மேஜர் பஞ்சாயத்தாக்கும் உத்தேசமுண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) ஆம்.

(இ) அப்படி ஒரு உத்தேசம் இப்போது இல்லை.

திரு. சா. ராமசாமி : இந்த விண்ணப்பத்தின் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது அந்தப் பஞ்சாயத்தைப் பிரிப்பதில்லை என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

Co-operative Sugar Mill for Madurai

* **1147** *Q.*—Sri K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to start a Co-operative Sugar Mill at Madurai; and

(*b*) if so, when and where?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) The Government of India have approved a proposal to set up a co-operative Sugar factory in the Madurai district. It has been decided to locate the factory in Urseri-Vavidamarudur villages in the Nilakottai taluk. The factory is in the process of organisation.

திரு. வை. சங்கரன் : அதற்காகத் தனியாரிடமிருந்து எவ்வளவு பங்குத் தொகை பெறப்பட்டது ? இதுவரை அதற்காக எவ்வளவு தொகை வசூலாகியிருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதுவரை 21 லட்ச ரூபாய்க்குமேல் வசூல் செய்யப்பட்டிருக்கிறது.

2nd November 1962]

'பாப்லோ' படகுகள் (செங்கல்பட்டு மாவட்டம்)

*1148 கேள்வி.—திரு. முனு ஆதி : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1961-ல் செங்கல்பட்டு மாவட்டத்தில் எத்தனை 'பாப்லோ' படகுகள் எந்த அடிப்படையில் விநியோகிக்கப்பட்டுள்ளன?

கனம் திரு. ந. நல்ல சேனபதி சர்க்கரை மன்றாடியார் : மீனவர்களுக்கும், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், முப்பது அடி நீளப்படகுகளும் இருபத்தைந்து அடி நீளப்படகுகளும் தவணைக் கொள்முதல் அடிப்படையில் கொடுக்கப்படுகின்றன. அதற்கு முன்னதாக முப்பது அடி நீளப் படகுக்கு, ரூபாய் 5,000-மும், இருபத்தைந்து அடி நீளப் படகுக்கு ரூபாய் 4,000 பிணைவைப்புத் தொகையாகக் கட்டவேண்டும். 1961-ல் செங்கற்பட்டு மாவட்டத்தில் விண்ணப்பதாரர்கள் யாரும் இந்த வைப்புத் தொகை கட்ட முன் வராததால் 'பாப்லோ' படகு எதுவும் வழங்கப்படவில்லை.

Industries (Quality Control)

*1149 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to introduce statistical quality control units for industries in the State?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir. A proposal to introduce statistical quality control for ceramics, steel furniture and cycle assembly to start with, under Small Scale Industries is under the consideration of the Director of Industries and Commerce. The details of the scheme have not yet been submitted to Government.

திரு. வை. சங்கரன் : இதுபோன்ற இதர தொழில்களுக்கும் இதை விஸ்தரிக்க உத்தேசமுண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : "ஸ்டாடிஸ்டிக்சல் க்வாலிட்டி கண்ட்ரோல்" என்பதை ஒன்றிரண்டு தொழில்களுக்கு உபயோகிப்பதற்கு முன்வந்திருக்கிறோம். பரீட்சை வெற்றிகரமாக இருந்தால் அதைப்பற்றி யோசனை செய்வார்கள்.

ஹரிஜனங்களுக்கு வீட்டு வசதி

*1150 **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தாலுக்கா தலைஞாயிறு கிராமத்தில் ஹரிஜனங்கள் வீடுகள் அமைக்க வாங்கிய கடனை திருப்பிக் கொடுக்க இயலவில்லை என்று சர்க்காருக்கு விண்ணப்பம் செய்துள்ளார்களா?

(இ) அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) The matter is under consideration of the Government.

[2nd November 1962

Tamil Typewriters

* 1151 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether Tamil typewriters have been supplied to the personal staff of Ministers; and

(*b*) how many Ministers are availing of the facility to correspond with non-officials?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes. The personal staff of the Chief Minister and most other Ministers have been supplied with Tamil typewriters.

(*b*) This depends on the convenience of the Ministers.

Districts (bifurcation)

* 1152 *Q.*—SRI M. V. KARIVENGADAM : }
SRI V. SANKARAN : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to bifurcate big districts in the State; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Government have issued orders for the bifurcation of Salem district territorially and for the appointment of a Joint Collector in Coimbatore district. Copies of the orders [a] are placed on the table of the House. A decision in respect of other districts will be taken only after watching the working of two schemes in these two districts.

திரு. வை. சங்கரன் : ஜில்லாக்களை இரண்டாகப் பிரிக்கும் போது எந்தெந்த காரணங்களை அடிப்படையாக வைத்து பிரிக்க முடிவு எடுக்கப்படுகிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஜில்லா ரொம்ப பெரிதாக இருந்தால் அதை இரண்டாகப் பிரிக்கலாம் என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து.

Tamil medium in colleges

* 1153 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the expert committee appointed to evaluate the progress of the scheme of Tamil medium in the Degree Courses has submitted its report; and

(*b*) if so, the details of the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The report [b] is placed on the table of the House.

a Printed as Appendix VI on pages 521–546)

b Not Printed as Appendix.

2nd November 1962]

மாஜி ராணுவத்தினர் கூட்டுறவு சங்கங்கள்

*1154 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் கூட்டுறவு அமைச்சர் கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-ல் மாஜி ராணுவத்தினர் கூட்டுறவு சங்கங்கள் எத்தனை உள்ளன?

(இ) 1962-ல் எத்தனை சங்கங்கள் கலைக்கப்பட்டன? ஏன்?

கனம் திரு ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) பதினாறு.

(இ) ஒன்று சென்னையில் மாஜி ராணுவத்தினருக்காக நிறுவப்பட்ட கூட்டுறவு மோட்டார் போக்குவரத்து சங்கத்தில் 1950-51 முதல் நஷ்டம் ஏற்பட்டு வந்தது. 1959-60-ல் நஷ்டம் ரூபாய் ஒரு லட்சத்து அறுபத்து மூவாயிரமாக உயர்ந்தது. வட்டியில்லாக் கடன் கொடுத்துதவியும் சங்கத்தின் வருமானத்தை உயர்த்த வகையில்லாமல் போய்விட்டது. சங்க நிர்வாகக் குழு சங்கத்தைக் கலைக்க தீர்மானித்தபடி சங்கத்தின் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டது.

ஆதாரப் பயிற்சிப் பள்ளிகள்

*1155 கேள்வி.—திரு ஆ. தங்கவேலு : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆதாரப்பயிற்சிப் பள்ளி மாணவர்களை தேர்ந்தெடுக்கும் குழுவினர் எந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Committees have been constituted only for Government Basic Training Schools and the members of the Committees are officials. No committees have been constituted for the private basic training schools.

Block Works (scarcity of cement)

*1156 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government are aware that many Block works could not be completed in time owing to scarcity of cement; and

(*b*) if so, what arrangements have been made to get over the difficulty?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The problem is engaging the attention of the Government.

I.A.S. Officers

*1157 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of officers in the State Service who were conferred I.A.S., during the current year;

[2nd November 1962

(b) how many of them were exempted from the prescribed qualifications; and

(c) if so, the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) One.

(b) None.

(c) Does not arise.

கூட்டுறவு முறையில் லாரி சர்வீஸ்

* 1158 கேள்வி.—திரு. வி. ஆர். பெரியண்ணன் : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காக கூட்டுறவு முறையில் லாரி சர்வீஸ் நடத்தும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(இ) இதுவரையில் எத்தனை மெம்பர்கள் சேர்ந்திருக்கிறார்கள் ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) & (இ) இதற்காக சென்னையில் 35 அங்கத்தினர்களுடன்கூடிய ஒரு கூட்டுறவு லாரி சங்கமானது 1961-ம் வருடம் செப்டம்பர் மாதம் ஒரு முன்னோடித் திட்டமாக ஆரம்பிக்கப்பட்டு பின் கைவிடப் பட்டது.

திரு வி. ஆர். பெரியண்ணன் : கேரளா போன்ற மாநிலத்தில் முதலில் ஒரு சங்கம் அமைத்து அது நல்லமுறையில் பணியாற்றுகிறது என்று பார்த்து மீண்டும் அத்தகைய சங்கம் வேண்டுமென்று அங்கு நிலைமையிருக்க, நமது மாநிலத்தில் இந்த சங்கம் கைவிடப்பட்டதற்கு காரணம் என்னவென்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : கேரள ராஜ்யத்தைப் போன்று இங்கு படித்தவர்கள் அதில் ட்ரைவர் வேலை செய்ய அல்லது மற்றபடி சாதாரண வேலைகள் செய்ய, அதில் ஈடுபடுத்த முடியவில்லை. அதனால் இது கைவிடப்பட்டது.

L.C.E. Diplomas

* 1159 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state why the Diploma Certificates have not so far been issued to the candidates who have passed the L.C E. Examination conducted by the Technical Education Board in October 1961.

THE HON. SRI R. VENKATARAMAN : The Diplomas are issued over the signature of the Chairman of the State Board of Technical Education and Training who is the Minister in charge of Technical Education. Prior to March 1962, the Finance Minister was in charge of Technical Education. As the Minister for Industries is now in charge of the subject, the forms had to be

reprinted. This resulted in some delay in the issue of the Certificates. The Diplomas have since been sent to the Principals of the various polytechnics for issue to the successful candidates.

திரு வை. சங்கரன் : எப்பொழுது இந்த டிப்ளமாக்கள் அனுப்பப்பட்டன?

கனம் திரு ஆர். வெங்கட்டராமன் : அனுப்பி ஒன்றிரண்டு மாதங்களாகின்றன.

Madras Village Panchayats Act, 1958

* 1160 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to amend the Madras Panchayats Act, 1958; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) At present, no, Sir.

(*b*) Does not arise.

சாலைகள்

* *1161 கேள்வி.*—**திரு கு. கோபால கவுண்டர்** : *கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

செஞ்சி தாலுகாவில் ஜெயங்கொண்டான் போணி ரோடு எப்பொழுது பூர்த்தியாகும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The work is expected to be completed by the end of the year 1962–63.

மதுவிலக்கு (அமுலாக்குதல்)

* *1162 கேள்வி.*—**திரு கரு. சீமைச்சாமி** : *கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) மதுவிலக்குச் சட்டத்தை அமுலாக்குவதில் 1960-61-ல் அரசாங்க ஊழியர்கள் எவ்வளவுபேர் தாக்குதலுக்கு உள்ளானார்கள்?

(இ) எந்தெந்த மாவட்டங்களில்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 1960 : 58; 1961 : 77.

(*b*) A statement [a] is placed on the table of the House.

Basic Education

* 1163 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to place on the table of the House a copy of the report submitted by Sri E. W. Ariyanayakam who was deputed to enquire into the system of Basic Education in the State?

[a] Printed as Appendix VII on page 547

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Report is under consideration of Government. A copy will be placed on the table of the House as soon as Government completes its examination of the report.

குடிநீர் திட்டம் (புளியங்குடி)

*1164 கேள்வி.—திரு வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) புளியங்குடியில் தண்ணீர் தட்டுப்பாடு இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

(இ) ஆமெனில் அதனைத் தீர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) ஆம், ஐயா.

(இ) சங்கரன்கோயில், புளியங்குடி இன்னும் சில பஞ்சாயத்துக்களுக்கும் சேர்த்து தண்ணீர் சப்ளை திட்டம் ஒன்றை 1961 மார்ச் மாதத்தில் அரசாங்கம் அனுமதித்தது. புளியங்குடிக்கு குழாய்கள் போடுவது சம்பந்தமாக அடிசனல் சிப் என்ஜினியரிடமிருந்து வந்துள்ள எஸ்டிமேட்டிற்கு அனுமதியளிக்கும் விஷயம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

கல்லூரிகளில் தமிழ் போதனை மொழி

*1165 கேள்வி.—திரு க. ர. நல்லசிவம்: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) தமிழைப் போதனை மொழியாகக் கொண்ட கல்லூரிகளின் ஆசிரியர்கட்கு விசேட தமிழ்ப்பயிற்சி வருடா வருடம் கொடுக்கப்படுகிறதா?

(இ) அவர்களது போதனமுறை எப்படியுள்ளதென்று பரிசீலிக்கப்பட்டதா? விவரமென்ன?

